செந்தமிழ்ச் செல்வி

உள்ளுறை

	பக்கம்
செம்பொருட்டுணிவு (சித்தாந்தம்)	௫௦௭
விண்ணப்பம் ஒன்று	௫௧௨
பூம்புகார்	௫௧௫
இது நல்ல சமயம்	௫௨௪
திருஉந்தியார்	௫௨௬
சைவசித்தாந்தத்தின் தொன்மை	௫௨௮
அறிவு விளக்கம்	௫௩௨
புலவர் மாணவர் தேர்வு முடிவறிக்கை	௫௩௪
புலவர் மாணவர் தேர்வுத் தகுதி விளக்கம்	௫௩௫
தென்னிந்திய சைவசித்தாந்த சங்க அறிக்கை	௫௩௯
செய்திகளும் குறிப்புகளும்	௫௪௦

KURAL

சிலம்பு ௨௯ | வள்ளுவர் ஆண்டு ௧௯௮௩, ஆனி (July 1952) | பரல் ௧௧

‘செந்தமிழ்ச் செல்வி’

இதழாசிரியர் கூட்டத்து உறுப்பினர்கள்

க. திரு. மகாமகோபாத்தியாய பண்டிதமணி, மு. கதிரேசச் செட்டியார் அவர்கள், மகிபாலன்பட்டி

உ. ,, ‘சித்தாந்த கலாநிதி’ வித்துவான், ஔவை. சு. துரைசாமிப் பிள்ளை அவர்கள்,
தலைமைத் தமிழ்விரிவுரையாளர், தியாகராயர் கல்லூரி, மதுரை.

ங. ,, துடிசைகிழார், அ. சிதம்பரனார் அவர்கள், கோயமுத்தூர்.

ச. ,, தி. சு. கந்தசாமி முதலியார் அவர்கள், எம். ஏ.,
வழக்குரைஞர், சாத்தூர்.

ரு. ,, வித்துவான், மு. இராசாக்கண்ணனார் அவர்கள்,
B.O.L. (Hons.) M.E.S., அரசினா கல்லூரி, கோயமுத்தூர்.

சு. ,, வித்துவான், பண்டித, கா. பொ. இரத்தினம் அவர்கள்,
பி. ஏ. (ஆனர்ஸ்) பி. ஓ. எல்.
அரசினர் ஆசிரியப் பயிற்சிக் கல்லூரி, கொழும்பு.

எ. ,, ‘சித்தாந்த பண்டிதர்’ ப. இராமநாத பிள்ளை அவர்கள்,
கழகப்புலமையாளர்.

நற்றிணை நானூறு

இதன்கண் பண்டுள்ள தமிழக எல்லை, மொழிவளம், நாட்டு வளம், கொடைவளம், செங்கோன் முறைமை, போர்த்திறன், நாகரிக மாண்பு, நன்னெறி வாழ்க்கை, கடவுட் கொள்கை, மற மானம் முதலிய பலவும் அகச்சான்றுடனும், அமைந்த உவமை யுடனும் பொருள்நயம் செழுமக் காணலாம்

இதற்கு, ஆசிரியர் பின்னத்தூர் திரு. அ. நாராயணசாமி ஐயரவர்கள் பல்லாற்றானும் செவ்விய நல்லுரையொன்று இயற்றி 1914 இறுதியில் வெளிப்படுத்தியுள்ளார்கள். உரை, உள்ளுறை இறைச்சி மேற்கோள் முதலிய விளக்கமும், ஆங்காங்கே இலக் கணக் குறிப்புக்களும், துறைச்சிறப்புக்களும் காட்டிஎளிய இனிய தூய நடையில் செல்கின்றது.

அவ்வுரையினைப் பின்னுங்கிடைத்த திருத்தப் பாடங் களுடன் செப்பம்செய்து, கடினமும் மயக்கமுமாகிய சந்திகளைப் பிரித்து, ஆயிரத்தைந்நூறுக்கு மேற்பட்ட அருஞ்சொற் பொருள் விளக்கத்துடன் நல்ல முறையில் நம் கழகப் பதிப்பாக வெளிவந்துளது.

அழகிய இருவண்ண மேலட்டையுடன் கூடிய

கலிக்காக்கட்டு விலை ரூ. 7 80

ஓம்

செந்தமிழ்ச் செல்வி

திங்கள் வெளியீடு

சிலம்பு உ௬ } திருவள்ளுவர் ஆண்டு ௧௯௮௩, ஆனி சூலை 1952 { பரல் ௧௧

செம்பொருட்டுணிபு

(சித்தாந்தம்)

மங்கல வாழ்த்து

"கல்லா ணிழன்மலை, வில்லா ரருளிய
பொல்லா ரிணைமலர், நல்லார் புனைவரே."

இத்திருப்பாட்டின் விளக்கம் சிலம்பு-உ௬, பரல்-௯-இன் கண் விளக்கப்பட்டுள்ளது. எஞ்சிய குறிப்பு வருமாறு: இதன் கண் உள்ள எழுத்துக்களை ஒற்றுநீக்கி உயிர்மெய் எழுத்தாக எண்ணுமிடத்து அடிதோறும் அவ்வாறு எழுத்துக்களாக எழுத்துக்கள் இருபத்துநான்காகும். இஃது உடல்மெய் (ஆன்ம தத்துவம்) இருபத்துநான்கினையும் குறிக்கும். இங்ஙனமே ஒற்றுக்களை எண்ணின் ல், ன், ல், ல், ர், ல், ர் என ஏழு ஒற்று எழுத்துக்கள் காணப்பெறும். இஃது உணர்வுமெய் (வித்தியா தத்துவம்) ஏழையும் குறிப்பதாகும்.

இத்திருப்பாட்டைப் புணர்வு பிரித்து எழுதின்,

புணர்வின் பிரிவு

"கல் ஆல் நிழல் மலைவு, இல் ஆர் அருள் இய
பொல்ஆர் இணை மலர், நல்ஆர் புனைவர் ஏ."

ல், ர், ள், ர், ர் என ஐந்து ஒற்றெழுத்துக்கள் காணப்பெறும். இஃது உணர்த்துமெய் (சிவதத்துவம்) ஐந்தையும் உணர்த்துவதாகும். எனவே, செந்நெறிச் செல்வர்கட்கு—சித்தாந்த சைவர்கட்கு மட்டும் உரித்தாகத் தொன்றுதொட்டு வழங்கி

வரும் மெய்கள் (தத்துவம்) முப்பத்தாறு. அவை உடல்மெய், உணர்வுமெய், உணர்த்துமெய் என முத்திறப்படும். அவற்றை ஆன்ம தத்துவம், வித்தியா தத்துவம், சிவ தத்துவமெனவும் வழங்குவர்.

நாலா றுயிர்மெய்யும் நண்ணு முடல்மெய்யாம்
பாலாரேழ் ஒற்றும் பகருணர்வாம்—நூலாற்
பிரிப்பிலாம் ஐந்தும் பெருகுணர்த்து மெய்யாம்
விரிப்புகல்லால் பாட்டுறையாம் மிக்கு.

இவ்வுண்மை,

மெய்யின் தொகை

"தத்துவம் எண்மூன் றுஞ்சென் றான்ம தத்துவத் தொடுங்கும்
வித்தையின் ஒடுங்கும் ஆறும் சிவத்தினில் ஒடுங்கு மூன்றும்
சித்ததத் துவம்இம் மூன்றும் என்பர்கள் இரண்டும் நின்ற
சுத்தமாம் சிவத்தொ டுங்கும் தோற்றமும் இதுபோ லாகும்."

—சிவஞானசித்தியார், உ. ௩-கசு௨.

என்னும் திருப்பாட்டால் உணர்க.

"அறுநான்க சுத்தம் அதிசுத்தா சுத்தம்
உறுமேழு மாயை உடனைந்தே சுத்தம்
பெறுமா றிவைமூன் றுங் கண்டத்தாற் பேதித்து
உறுமாயை மாமாயை ஆன்மாவி னோடே."

—திருமந்திரம், அ. எ சக.

இத் திருமூலர் திருப்பாட்டும் முத்திறத்துமெய்(தத்துவம்)கள் முப்பத்தாறினையும் முறையே குறிப்பது காண்க.

செந்நெறிச் சிறப்பு

"ஆகின்ற தொண்ணூ றோ டாறும் பொதுவென்பர்
ஆகின்ற ஆறு அருஞ்சைவர் தத்துவம்
ஆகின்ற நாலேழ் வேதாந்தி வயிணவர்க்கு
ஆகின்ற நாலாறை யைந்துமாயா வாதிக்கே."

—திருமந்திரம், அ. ச-க௩.

இதன்கண் சித்தாந்த சைவர்க்கேயுரிய மெய்முப்பத்தாறும் குறிக்கப்பெற்றமை காண்க.

மெய்யின் விளக்கம்

உடல்மெய் இருபத்துநான்கு: பூதம் ஐந்து, பூதமுதல் ஐந்து, அறிபொறி ஐந்து, தொழிற்பொறி ஐந்து, அகப்புறக் கலன் (அந்தக்கரணம்) நான்கு.

உணர்வுமெய் ஏழு : தூவாமாயை, காலம், ஊழ், (நியதி) கலை, அறிவு, (வித்தை) விழைவு (அராகம்).

உணர்த்துமெய் ஐந்து : அறிவு, ஆற்றல், அன்பு, ஆட்டல், ஊட்டல். (சிவம், சத்தி, சதாசிவம், ஈசுவரம், சுத்தவித்தை.)

அவையடக்கம்

மெய்யுணர்வு

" தம்மை யுணர்ந்து தமையுடைய தன்னுணர்வார்
எம்மை யுடைமை எமையிகழார்—தம்மை
உணரார் உணரார் உடங்கியைந்து தம்மிற்
புணராமை கேளாம் புறன்."

இதன் பொருள்: தம்மை - அடிமையாகிய தம் இயல்பினை; உணர்ந்து - அருளால் உணர்ந்து; தமை உடைய - தம்மை உடைப் பொருளாகக்கொண்டு ஓம்பியருளும்; தன் - உடையானாகிய தலைவனை; உணர்வார் - உணரும் செம்பொருட்டுணிவினராகிய சித்தாந்த சைவர்; எம்மை உடைமை - எம்மை ஆண்டவன் தொடர்பால் தமக்கு உடைமையாகக் கோடலின்; எமை இகழார் - எம்மைக் குற்றம் நீக்கிக் குணங்கொண்டு கோதாட்டுவதல்லாமல் இகழ்தல் செய்யார்; தம்மை உணரார் உணரார் - தம்மையுணராதார் தம்மையுடையானாகிய தலைவனையும் உணரார். உடங்கு இயைந்து தம்மிற் புணராமை - ஒருங்குகூடித் தம்மில் தாமே சேராது முரணுதலால்; புறன் கேளாம் - எம்மையும் எம்மாற் செய்யப்படும் நூலையும் இகழும் இகழ்வுரையை ஒரு பொருளாகக் கொள்ளாம்.

உறவு

செய்தவப்பேற்றால் மெய்யுணர்வு கைவந்த சிவனடியார் மற்றோர் அடியவர்க்கு உறவினராவர். இது, பிள்ளைகட்கு அவர்தம் பெற்றோரின் உறவினர் அனைவரும் உறவினர் ஆவது போலாம். மாணவர்க்கு ஆசான் உறவினரும், குடிகட்கு வேந்தன் உறவினரும் உறவினர் ஆவது போன்றும் ஆகும். முன்னை ஆர் தொடர்புடையார் பின்னையாரைப் பிழைநீக்கிப் பெரிதும் பாராட்டுவர்.

" பத்துடையீர் ஈசன் பழஅடியீர் பாங்குடையீர்
புத்தடியோம் புன்மைதீர்த்து ஆட்கொண்டால் பொல்லாதோ."
—அ. திருவெம்பாவை, ௩.

இதன் பொருள்: ஆண்டவன்பால் அவனருளால் கொள்ளும் அன்பும், அங்ஙனமே அவனை அறியும் அறிவும், அவன்

அருள்வழி நிற்கும் ஆற்றலும் உடையோர் இறைபணியாளராம் பழஅடியார் ஆவர். அவர்கள் தவப்பேற்றால் அன்பு, அறிவு, ஆற்றல்கள் மூன்றும் முக்கண்ணன்பால் வைத்தொழுகும் மெய் யடியார்களின் தாழ்வகற்றி அவர்களை நல்வாழ்வில் வைப்பர். இது, தேறிய மாணவர் தேறலுற்றார்க்கு ஊறு செய்யாது உறு துணையாவது போன்றாகும்.

மாண்பு

சித்தாந்த சைவரின் உயர்வும் ஏனைய நெறியினரின் இழி பும் இதன்கண் கூறப்படுகின்றன. சித்தாந்த சைவர் உண்மை உணர்ந்த ஒண்மையர். அதனால், அவர்கள் எவரையும் இகழ்ந்து கூறார். யாவரையும் புகழ்ந்து கூறுவர். யாவரும் படிமுறை யான் உணர்த்த உணரும் அறிவினர். அவர்கள் தத்தம் நெறி யில் நிற்பினும் மேலோரை நோக்க உயரவேண்டும் பான்மை யரே. அதனால் நன்மைக்கு மாறுசெய்வாரே இகழ்தற்குரியர். வேறுபடுவார் திருந்துவார் என்று புகழ்தற்குரியரே யாவர். இதுவே பெரியோர் செய்கை. இத்தகைய பெரியோரே சித்தாந்த சைவராவர். ஏனையோர்-ஏனைச் சமயத்தினர், பிறரை இகழ்ந்துரைப்பர். பிறரை இகழ்வது தம்மை இகழ்வதே என்னும் எண்ணம் அவர்களுக்குத் தெரிவதே இல்லை. தெரி யுமேல் அங்ஙனஞ் செய்யார்.

தம்முள் முரணுதல்

காட்சியளவையான் உணரப்படுவதே உண்மை என்பர் ஒரு சாரார். இவர்களை உலகாயதர் என்பர். இவர்கள் நிலன், நீர், நெருப்பு, உயிர்(காற்று) என்னும் பூதம் நான்கு. இவற்றின் கூட்டத்தால் உணர்வுண்டு. இவற்றையல்லாமல் கடவுளும், உயிரும், வினையும், பிறப்பும் உண்டென்பது பொய். பூதம் ஐந்து கொள்ளினும் அறிவுடைய உயிர் ஒன்று உண்டு எனக்கொள் ளார் புத்தர். இவர்களை யொத்தவர்களே, சாங்கியர், மாயாவாதி கள். கடவுளுக்குத் தாம் உடைமை என்று உணராத கொள்கை யினரும் இவர்களுள் அடங்குவர். கடவுளின் உண்மைத் தன்மை உணராதோரும் இவர்களோடு ஒத்தவரே யாவர்.

இவர்கள் அனைவரும் முப்பொருள் உண்மை உணர்ந்த 'சித்தாந்த சைவருடன்' முரண்படுவர். அவர்களை இகழ்வர். இவ்விரண்டினும் ஒன்று பட்டாலும் தத்தம் கொள்கையில் மாறுபட்டுக் கலாம்விளைப்பர். ஆதலால் இவர்கள் சொல்லைக் கேளாம் என்றனர்.

சித்தாந்த சைவர் இவர்களுள் எவரையும் இகழார். காரணம்: முழுமுதல்வன் திருவருளால் இவர்கள் அனைவரும் ஒரு காலத்துச் சித்தாந்த சைவச் செந்நெறியைச் சேர்வர் என்னும் குறிக்கோளுடைமையே. பருவமுதிர முதிர அரும்பு கனியாவது போல் கனிவர். மாணவன் ஆசான் ஆவதுபோல் ஆவர். மேலும்,

"அற்ற மறைக்கும் பெருமை சிறுமைதான்
குற்றமே கூறி விடும்." —திருக்குறள், கூஅ0.

என்னும் செந்தமிழ்ப் பொதுமறையின்படி குணநலங் கூறுவதே சான்றோர் மனநலமும் இனநலமும் ஆகும்.

உணருநெறி

கடவுளை யுணர்ந்து தம்மை யுணரவேண்டுமென்பது முதற்படி. தம்மை யுணர்ந்து கடவுளை யுணரவேண்டு மென்பது மேற்படி. கடவுளை உணரும் நெறி நால்வகைப்படும். அவை, காண்டல், கருதல், கலத்தல், கனிதல் என்பன. இவற்றுள் காண்டல் கருதல் இரண்டற்கும் கடவுளை உணர்ந்து தம்மை உணரவேண்டும். கலத்தல் கனிதல் இரண்டற்கும் தம்மை யுணர்ந்து கடவுளை யுணரவேண்டும். இது,

மாம்பழத்தைக் காண்டலும், கருதலும் கடைக்காரரால் ஆம். பெறுதலாகிய கலத்தலும் துய்த்தலாகிய கனிதலும் வாங்குவோரால் ஆம். காதலிருவருள் காண்டற்கும் கருதற்கும் இடம் தலைவனும், கலத்தற்கும் கனிதற்கும் இடம் தலைவியும் ஆம் உண்மையும் இதன் ஒருபுடை ஒத்துநோக்கற் பாலன.

பெற்றோர்களால் *பிள்ளைகள் தங்கள் பெயர், ஊர், பொருள், உறவு முதலியவற்றை முதற்கண் உணருவர். இது கடவுளால் உயிர்கள் தம்மை உணர்வதை யொக்கும். அதன் பின், பிள்ளைகள் பொருளொடும் உறவொடும் பொருந்திவாழ்வர். இது, தம்மையுணர்ந்து கடவுளை யுணர்வதாகும். ஈண்டு உணர்வது என்பது உரிமையும், பற்றுக்கோடும், பயன்துய்ப்பும் பாங்குறப் பயிறலாகும்.

—இதழாசிரியர்.

---

*பிள்ளைகள் பெற்றோரால் பேரூர் உறவுணர்வர்
கொள்வர்தம் மாலவர்பால் கூடுகுணம்—விள்ளுமெய்ந்நூல்
காண்டல் கருதல்வழிக் கண்ணுதலாற் றானறிதல்
ஈண்டுகலத் தல்கனித லெண்.

*விண்ணப்பம் ஒன்று

[திரு. சோ. கு. மதுரைநாயகம்]

கல்லால் நிழல்மலை, வில்லார் அருளிய
பொல்லார் இணைமலர், நல்லார் புனைவரே.

சித்தாந்தத் தேனருந்திச் செம்மாந்திருக்கும் பெரியோர்களே! தாய்மார்களே! சகோதரர்களே! குழந்தைகளே! உங்கள் அனைவருக்கும் எனது வணக்கமும் நன்றியும் உரியவாகும்.

நான் பேசுவதற்கு எடுத்துக்கொண்ட பொருள் 'விண்ணப்பம் ஒன்று' என்பது. ஆதலின் முதலில் உங்கள் அனைவருக்கும் ஒரு விண்ணப்பம் செய்துகொள்ளுகின்றேன்.

திருவுரு

அன்பர்களே! சென்ற பதினைந்து நாட்களாக இங்கு நடைபெற்றுவரும் சித்தாந்த நிகழ்ச்சிகளைக் கண்டும் கேட்டும் இன்புற்றிருக்கும் உங்கள் எல்லோரையும், மானசீகமாக இப்பொழுது நான் கைலாயகிரிக்கு அழைத்துச் செல்கின்றேன். ஏனெனில் சித்தாந்தச் செல்வர்களாய் விளங்கும் உங்கட்கு கைலைநாதனாகிய பெருமான் ஆசி வழங்க அதோ! வருகின்றான். அப்பெருமானை எதிர்கொண்டு அழைக்க வேண்டாமா? பாருங்கள்!

'குனித்த புருவமும் கொவ்வைச் செவ்வாயில் குமிண் சிரிப்பும், பனித்த சடையும், பவளம்போல் மேனியில் பால் வெண்ணீறும்,' உடையானும், ஒருபால் உமையம்மையும், இருவருக்கும் நடுவில் ஞானக்குழந்தையாகிய முருகப் பெருமானும் முறுவல் பூப்ப நந்தியம்பெருமான் மீதமர்ந்து, விண்ணினின்றும் காட்சி தருகின்றனன். இத்தகைய மானதக் காட்சியே உண்மைக் காட்சியாய் அமையுமாறு செய்யவல்ல உயர்சிவஞானபோதத்தை என்போன்ற அன்பர் பலருக்கும் போதிக்க வகை செய்த பெரியார்கட்கும், சிறப்பாக நெல்லைச் சைவசித்தாந்த சங்கத்தார்க்கும், இச்சங்கத்தார்க்கு உற்ற துணையாகவிருந்து உள்ளம், உரை, செயல்களால் பெரும்பணிபுரிந்த நெல்லைச் சந்திப்பு, தருமபுரமடத்து அருணகிரி இசைக் கழகத்தார்க்கும் எனது அன்பான வணக்கத்தையும் நன்றியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்.

---

* நெல்லைச் சித்தாந்த வகுப்பில் நிகழ்த்திய சொற்பொழிவு.

இன்றியமையாமை

அன்பர்களே! இன்னும் ஒரு விண்ணப்பம்.

எல்லா நலன்களும் அமையப்பெற்ற நம் தென்பாண்டி நாட்டில், 'என்றுமுள தென்றமிழ் இயம்பி இசைகொண்டா'ஞகிய அகத்தியமுனிவன் வாழும் பேறுபெற்ற பொதிகையமைந்த இத்திருநாட்டில், சிவஞானம் கைவரப்பெற்ற குமரகுருபரரும், மாதவச் சிவஞான சுவாமிகளும் பிறந்த இப்பொன்னுட்டில், நம் செந்தமிழ் நூல்களைக் கற்பதற்கு விழைந்து நிற்கும் தமிழ் இளைஞர்க்கு ஏற்றதொரு செந்தமிழ்க் கல்லூரி இல்லாமலிருப்பது பெருங்குறைபாடேயாகும். சென்ற பதினைந்து அல்லது இருபது வருடங்களாக இம்மாவட்டத்திலிருந்து தமிழ் வித்துவான் வகுப்பிற் சேர்ந்து பயிலும் மாணவர்கள் இருநூறு மைல்களுக்கு அப்பாலுள்ள தஞ்சையையோ, அதற்கப்பாலுள்ள பிற இடங்களையோ சார்ந்து பயிலவேண்டியதிருக்கிறது. இக் குறையை நீக்கவேண்டியது நம் கடமையல்லவா? வருங்காலத்து நம் இளைஞர்கள் இவ்வுலகத்து வாழ்வாங்கு வாழ்ந்து, நமது அரும் பண்புகளைக் காக்க வல்லவர்களாய் ஆக்கவேண்டிய பொறுப்பு நம்மையே சார்ந்ததாகும்.

வாய்ப்பிடம்

ஆதலின், வடபால் தஞ்சையைச் சார்ந்துள்ள திருவையாற்றில் பொய்யா வளஞ்சுரக்கும் பொன்னியாற்றங்கரையில் பொலிவுடன் விளங்கிவரும் அரசர் கல்லூரியைப்போல, தென்பால், தண்ணுரமுதளிக்கும் தண்பொருநையாற்றங்கரையில், இயற்கைவளஞ் செறிந்த பொதிகைமலைச் சாரலில், நம் சமயவறிவுடன் இயல் இசை நாடகமாகிய முத்தமிழும் விரவிக் கலந்து பயிற்றுவிக்கும் செந்தமிழ்க் கல்லூரி ஒன்று நிறுவப்படல் வேண்டும். விரும்பும் மாணவர்க்கு வேண்டும் அறிவுக்கலைகளைப் பயிற்றுவிக்கும் கவி. தாகூரின் சாந்திநிகேதனம்போல, இத் தென்னுட்டில் கலைக்கோவில் ஒன்று திகழ்தல் வேண்டும். அதற்குரிய செல்வம் இந்நாட்டில் தக்கார் பலர் புறப்படின்தானே கைவரும்.

திருமடத் தொடர்பு

பல்லாண்டுகளாக நம் செந்தமிழ் மொழிக்கும் சைவ நல்நெறிக்கும் தாயகமாக விளங்கிவரும் துறைசையாதீனம், தருமையாதீனம், பனசையாதீனம் ஆகிய மூன்று ஆதீனங்கட்கும் நம் நெல்லைமாவட்டத்தில் மிகுதியும் தொடர்புண்டு;

அவ்வாதீனங்களின் கர்த்தர்களாகிய மகா சந்நிதானங்கள் இம் மாவட்டத்திலிருந்து கிடைக்கும் ஓராண்டு வருவாயில் ஒரு பகுதியை மனமுவந்தளிப்பார்களேயானால் மிகவும் அழகிய முறையில் செந்தமிழ்க் கல்லூரி ஒன்று நிறுவிவிடலாம்.

அன்றியும், இம்மாவட்டத்திலேயே நம் செந்தமிழ்த்தாய்க்கு அள்ளிக்கொடுக்கும் சீரியோர் பலர் இருக்கின்றனர். நமக்கு ஆசிரியராக அமர்ந்து விளங்கும், திரு. முதலியார் ஐயா அவர்களும், சிவஞான சுவாமிகளின் பரம்பரையில் வந்த பெரியாராகிய அம்பை. திரு. சிவஞானம்பிள்ளையவர்களும், இன்னும் தக்கார் பலரும் சேர்ந்து முயன்றால், விரைவில் இந்நாட்டில் பெருமைமிக்க கலைக்கோவிலைக் கண்டு மகிழலாம். நம் எண்ணம் நிறைவெய்த எல்லாம் வல்ல பெருமான் துணை புரிவானாக.

வாழ்க தமிழ், வளர்க சைவம்,
வெல்க நெறிநின்றார் தொண்டு.

அருள் விண்ணப்பம்

"பொன்னார் திருவடிக் கொன்றுண்டு
    விண்ணப்பம் போற்றிசெய்யும்
என்னாவி காப்பதற் கிச்சையுண்
    டேலிருங் கூற்றகல
மின்னாரு மூவிலைச் சூலமென்
    மேற்பொறி மேவுகொண்டல்
துன்னார் கடந்தையுள் தூங்கானை
    மாடச் சுடர்க்கொழுந்தே."

—ஆளுடைய அரசு, ச. ௧௧0 ௧.

ஆளுடைய அரசு புன்னெறி அகன்று நன்னெறி புக்கனர். புக்கவர் தம் அருமைத் தமைக்கையாரால் ஐந்தெழுத்தோதி வெண்ணீறு அணியப்பெறினும், ஆண்டவனாலும் அடையாளம் பெற வேண்டினர். அப்பொழுது பாடிய திருப்பாட்டாகும் இது. இதன்கண் வலத்தோளிற் சூலமும் இடத்தோளில் இடவமும் பொறிக்கப்பெற்றவராகக் கொள்க. இவை முறையே துன்ப நீக்கமும் இன்ப ஆக்கமுமாகும்.

—இனியன்.

பூம்புகார்*

[டாக்டர், திரு. மா. இராசமாணிக்கம், M,A., L.T., M.O.L., Ph.D.]

பெயர் விளக்கம்

"புகார்" என்ற சொல்லுக்கு ஆற்றுமுகம் என்பது பொருள். "புகாஅர்ப் புகுந்த பெருங்கலம்" என்பது புறநானூறு.† காவிரி கடலொடு கலக்கும் இடமும் அதனைச் சார்ந்த மணற்பரப்பும் தாழம்பூக்காடு நிறைந்த பகுதியாகும். அங்குப் புன்னை முதலிய மரங்கள் செழித்திருந்தன.‡ இக்காரணத்தால் புகார் என்பது "பூங்கானல்", "பூமலி பெருந்துறை" என்று பட்டினப்பாலை கூறும்.§ எனவே, "பூங்கானல்" என்பது "பூம்புகார்" என வழங்குதல் இயல்பேயன்றோ! ஆற்றுமுகத்தை யுணர்த்தும் புகார் என்னும் பெயர் அவ்விடத்தில் அமைந்த நகரத்திற்கும் பெயராயிற்று.

நகரப் பிரிவுகள்

பூம்புகாரைப் பற்றிப் பேசும் சிலப்பதிகாரம், மணிமேகலை, பட்டினப்பாலை என்னும் பண்டைய நூல்களில் புகார் நகரப் பிரிவுகளும் அவைபற்றிய விளக்கமும் காணப்படுகின்றன. புகார் நகரத்தில் கடற்கரையைச் சார்ந்த பகுதி மருவூர்ப் பாக்கம் எனவும், அதற்கு அப்பாற்பட்ட பகுதி பட்டினப் பாக்கம் எனவும் பெயர் வழங்கின. இவ்விரண்டுக்கும் இடைப்பட்ட நிலப்பகுதி சோலைகள் நிறைந்ததாய்ப் பெருங்கடைத் தெருவைத் தன்னகத்தே கொண்டதாய் இருந்தது. அவ்விடம் **நாளங்காடி** எனப் பெயர்பெற்றது.

மருவூர்ப்பாக்கம்

பூம்புகார் கடற்கரைப் பட்டினமாதலின் கரையோரம் இருந்த மருவூர்ப்பாக்கத்தில், சோழநாட்டுடன் வாணிகம் நடத்திவந்த அயல்நாட்டார் பெரிய மாளிகைகளை யமைத்துக் கொண்டு வாழ்ந்துவந்தனர். பட்டு நூலாலும், எலி மயிராலும், பருத்தி நூலாலும் நுட்பமான தொழிலைச் செய்த பட்டுச் சாலியர்தெரு, விலையுயர்ந்த மணிகளும் பொன்னும் சேமித்து

---

* இது 'பூம்புகார்' எனப் பெயர்பெற்ற காவிரிப்பூம்பட்டினத்தில் நடைபெற்ற சிலப்பதிகார மாநாட்டில் (15-6-51) டாக்டர். ஆர். கே. சண்முகம் அவர்கள் தலைமையிற் பேசிய சொற்பொழிவு.

† செ. 30.

‡ சிலப். கடலாடுகாதை, வரி - 166-8.

§ வரி 94 and 105.

வைக்கப்பட்ட தெருக்கள், நெல் முதலிய கூலவகைகளை விற்கும் தெருக்களும், பிட்டு வாணிகர், அப்ப வாணிகர், கள் விற்பவர், மீன் பிடிப்பவர், உப்பு விற்பவர், பலவகை இறைச்சிகளை விற்போர், கற்பூரம் முதலிய வாசனைப் பொருள்களை விற்போர், ஆட்டு வாணிகர், எண்ணெய் வாணிகர், கன்னர், தச்சர், கொல்லர், ஓவியர், சிற்பர், குயவர், உருக்குத்தட்டார், இரத்தினப் பணித்தட்டார், சிப்பித்தொழில் செய்பவர், தோலைக்கொண்டு பலவகை உறைகளைச் செய்பவர், கிழி, நெட்டி இவற்றைக் கொண்டு மலர், வாடாத மாலை, பொய்க்கொண்டை முதலிய வற்றைச் செய்பவரும், இசையில் வல்ல குழலர், பாணர், ஏவல் மக்கள் முதலியோர் வாழத்தக்க தெருக்களும் மருவூர்ப்பாக்கத்தில் இருந்தன.

பட்டினப்பாக்கம்

அரசனும் அரசமரபினரும் வாழும் பெருந்தெரு, தேரோடும் தெரு, கடைத்தெரு, செல்வ வணிகருடைய மாடமாளிகைகள் நிறைந்த தெரு, மறையவர் தெரு, வேளாளர், மருத்துவர், சோதிடர் தெருக்கள், முத்துக்கோப்பவர், சங்கறுப்பவர், அரசனை நின்று பாடுவார், இருந்து பாடுவார், வைதாளியாடுவார், கடிகையார் (Time-Keepers) சாந்திக்கூத்தர், களத்தாடும். கூத்திகள், அகக்கூத்தாடும் பதியிலார், பரத்தையர், பணிப் பெண்கள், தோற்கருவி முதலிய பலவகைக் கருவிகளை இசைப்பவர், பரியாசகர் (விகடர்), குதிரைப் பாகர், யானைப் பாகர், தேர்ப்பாகர், காலாட்படையினர் முதலியோர் வாழ்ந்த தனித் தனித் தெருக்கள் பட்டினப்பாக்கத்தை அழகு செய்தன.

நாளங்காடி

மேற்கூறப்பெற்ற நகரப் பகுதிகளிரண்டிற்குமிடையில், பொது நிலமிருந்தது. அங்கு வரிசை வரிசையாக வளர்ந்த மரங்களைக்கொண்ட சோலை இருந்தது. அம்மரங்களையே தூணாகக்கொண்டு கட்டப்பட்ட கடைகள் மிகப்பலவாக விளங்கின. அவற்றின் தொகுதி நாளங்காடி எனப்பட்டது. அங்கு முசுகுந்தன் ஏவலால் நிலைத்த நாளங்காடிப் பூதத்திற்குக் கோயில் இருந்தது. சித்திரை மாதத்துச் சித்திரை நாளில் மறக்குடிப் பெண்டிர் அப்பூதத்தை வழிபட்டு, “எம் மன்னனது நாடு முழுதும் வறுமை நீங்கி வளம் சிறப்பதாக,” என வாழ்த்தித் துணங்கைக் கூத்தும், குரவைக் கூத்தும் ஆடுதல் வழக்கம். அரசன்மேல் அளவுகடந்த பற்றுடைய வீரர்கள் தம் வேந்தன் நலத்தைக் கருதித் தம் தலைகளை யறுத்துப் பூதத்திற்குப் பலியிட்டுவந்தனர்.

இந்நாளங்காடியைப் போலவே மருவூர்ப்பாக்கத்தில் இராக்கடைகள் இருந்தன. அவற்றின் தொகுதி அல்லங்காடி எனப்பட்டது.

பலவகை மன்றங்கள்

பொருளைக் களவு செய்வாரை அம்பலப்படுத்தி அவமானப் படுத்தும் **வெள்ளிடை மன்றம்**, பலவகை நோயாளர் நீராடிய அளவில் நலனைச் செய்யும் பொய்கையை உடைய **இலஞ்சி மன்றம்**, (இலஞ்சி - மடு) பித்துக்கொண்டவர், நஞ்சுண்டவர், விடக்கடியுண்டவர், பேய்பிடிக்கப்பட்டவர் ஒருமுறை சூழ்ந்துவருதலால் அவர்கள் தெளிவுபெறக் காரணமாகிய ஒளியை வெளிப்படுத்தும் **நீண்டகல் நிறுத்தப்பெற்ற மன்றம்**, பொய்த் தவவேடங் கொண்டவரும், கணவரை வஞ்சித்தொழுகும் பெண்டிரும், தீய அமைச்சரும், பிறர் மனை விழைந்தோரும், பொய்க்கரி புகன்றோரும், புறங்கூறுவோரும் ஆகிய இவர்களைத் தண்டிக்கும் இயல்புடைய பூதம் நிலைபெற்ற **பூதச்சதுக்கம்**, அரசனது செங்கோல் சிறிதளவு தவறினும், அறங்கூறவையத்தார் நடுவுநிலை தவறினும், தன் நாவாற் கூறாது நீர் உகுத்துக் கண்ணுற்கூறும் பாவையொன்று நிற்கும் **பாவை மன்றம்** ஆகிய ஐந்தும் பூம்புகாரில் குறிக்கத்தக்க மன்றங்களாகும்.

கோயில்கள்

பூம்புகாரில் இருந்த கோயில்களில் (1) சிவன் கோயில், (2) பெருமாள் கோயில், (3) பலராமன் கோயில், (4) இந்திரன் கோயில், (5) முருகன் கோயில், (6) சூரியன் கோயில், (7) சந்திரன் கோயில், (8) புத்தர் கோயில், (9) அருகதேவன் (சமணர்) கோயில் என்பன குறிக்கத்தக்கவை. சமணர் மடத்தில் துறவுபூண்ட ஆடவரும் இருந்தனர்; பெண்டிரும் இருந்தனர். அவர்கள் அடிகள் குரத்திமார் என்று அழைக்கப்பட்டனர். பௌத்த மடத்திலும் ஆண் துறவிகளும் பெண் துறவிகளும் இருந்தனர். ஆண் துறவிக்கு பிட்சு என்றும் பெண் துறவிக்குப் பிக்குணி என்றும் பெயர்கள் வழங்கின.

தெருக்களும் வீடுகளும்

பூம்புகார் நகரத் தெருக்கள் அகன்றும் காற்றோட்ட வசதிக்கேற்பவும் அமைந்திருந்தன. தெருக்களிலிருந்த பெரும்பாலான வீடுகள் மாடமாளிகைகளாகக் காணப்பெற்றன. சில மாளிகைச் சுவர்களில் தேவர், மக்கள், விலங்குகள், பறவைகள் முதலிய உயிர்களைக் குறிக்கும் சுதையுருவங்கள் காணப்பெற்

றன.* மானின் கண்போன்ற தொளையிடப்பட்ட சாளரங்கள் மாளிகைகளில் இருந்தன. அயல்நாட்டவர் தமக்கென அமைத்துக்கொண்ட கட்டடங்கள் காண்போர் கண்களை அயலிற் செல்லவிடாமல் தடுத்தன (மிக்க வேலைப்பாடு கொண்டிருந்தன) என்று சிலப்பதிகாரம் செப்புகின்றது.† சில வீடுகள் தட்டை ஓடுகள் இடப்பெற்று சாந்து பூசப்பெற்றவை. அவை வேயாமாடங்கள் எனப்பட்டன.‡ சில மாடங்கள் மிக உயர்ந்து காணப்பட்டன. அவை சொர்க்கத்தையொத்தன என்று பட்டினப்பாலை பகர்கின்றது.§ அவற்றில் வாழும் மகளிர் தென்றற் காற்று வீசும் சாளரங்களின் எதிரே நின்று, அங்காடித் தெருவில் மாதர் பாட, குழல் ஊத, யாழ் வாசிக்க, முரசு கொட்ட, முழவு ஒலிப்ப நடைபெறும் முருக விழாவைக் காண்பர்; முருகக் கடவுளையும் பிற தெய்வங்களையும் அங்கிருந்தபடியே தம் கைகளைக் குவித்து வணங்குவர்.$ மாளிகையில் மேற்பகுதி நிலவு காயத்தக்க திறந்த வெளியாக அமைக்கப் பெற்றிருந்தது. அது **நிலா முற்றம்** எனப் பெயர் பெற்றது.¶

வனங்கள்

பூம்புகார் நகரத்து வனங்களில் குறிக்கத்தக்கவை சில. அவற்றுள் தண்ணீரை நிரப்பவும், அத் தண்ணீரைக் காலி செய்யவும் வல்ல இயந்திர அமைப்புடைய வாவியைத் தன்னகத்தே பெற்ற அழகிய பூஞ்சோலை ஒன்று. அது அரசர் அமைச்சர் முதலியோர்க்கு உரிய இடமாகும். மற்றொன்று **உய்யானவன**மென்பது. சூரிய கிரணத்தால் சிறகை யிழந்த சம்பாதி என்ற பறவையிருந்த **சம்பாதிவன**மொன்று. காவிரியின் தந்தையென்று கூறத்தக்க கவேரன் தவம் செய்த **கவேர வனம்** ஒன்று. **உவவனம்** ஒன்று. அவ் வனத்தில் தன் அகத்துள் இருப்பவர் ஓசையை வெளிப்படுத்தாமல் அவர் தம் உருவங்களை மட்டும் வெளிப்படுத்தும் பளிங்கு மண்டபம் ஒன்று இருந்தது. அம் மண்டபத்தினுள்ளே மாணிக்கச் சோதி பரந்த **பதுமபீடம்** ஒன்று இருந்தது. பூம்புகார் நகர் தோன்றிய காலத்தே உடன் தோன்றியதான நன்காடு; சக்கரவாளக் கோட்டம் எனப் பெயர்பெற்றது. அது நாற்புறத்தும் வாயில்களையுடைய மதிலால் சூழப்பட்டது; காளிக் கோட்டமும் பலவகை மன்றங்களும், அருந்தவர், அரசர், பத்தினிப் பெண்டிர் இவர்கட்கு எழுப்பிய கோட்டங்களும் பிறவும் கொண்டது.

---

* மணி. காதை. 3. வரி 126-131. † சிலப். காதை 5. வரி 8-10.
‡ சிலப். காதை 5. 5 வரி 7. § வரி. 104-111.
$ பட்டினப்பாலை வரி 150. ¶ சிலப். காதை 2. வரி 26-7.

அரங்குகள்

அறிவாலும் திருவாலும் செழித்திருந்த பூம்புகார் நகரில் கலைகள் நன்கு வளர்க்கப்பட்டன என்பது அரங்கேற்று காதையால் நன்கு அறியலாம். அக்காதையில் கூறப்பட்டுள்ள மாதவி பாடிய நடன அரங்கத்தின் நற்சிறப்பினை நன்கு தெளியலாம்.

நகரப் பரப்பு

கோவலன் கண்ணகியை யழைத்துக்கொண்டு பூம்புகாரை விட்டு நீங்கிய விவரத்தைக் கூறவந்த இளங்கோவடிகள், நகரத்தின் மேற்குப் பக்கத்தில் ஊர் வாசலுக்கப்பால்—இலவந்திகை இருந்ததாகவும் குறிப்பிட்டுள்ளார். அதற்கப்பால், இருமருங்கும் சோலைசூழ்ந்த பெரிய சாலை வழியே பூம்புகார் மக்கள் சென்று நீராடும் திருமுகத் துறையைக் குறிப்பிடுகின்றார்; அக்காலத்தில் அங்கொரு வாயில் இருந்ததாகவும் குறித்துள்ளார். அதற்கப்பால் கோவலன் மேற்குத் திசையில் மதுரை நோக்கிச் சென்றான் என்று குறித்துள்ளார். இவற்றை நோக்க, நகரத்தின் மேற்குப் பகுதியின் கடைசி எல்லை, காவிரிக் கரையில், திருமுகத் துறையிடத்து அமைந்த வாசல் வரை இருந்ததெனக் கொள்ளலாம். சதுக்கப் பூதம் "அவ்வூர் நாற்காத எல்லையும் கேட்கும்படி தனது கடிய குரலால் உணர்த்தியது," என வரும் இளங்கோவடிகள் கூற்றையும்,* "காத நான்கு...............ஊர் சூழ்ந்த நாற்காத வட்டகையும்," என்னும் அரும்பதவுரையாசிரியர் குறிப்பையும் நோக்க, பூம்புகார் நகரம் நான்கு காதம் அதாவது நாற்பது மைல் சுற்றளவுடையது என்னும் உண்மை புலனாகும்.

திருவெண்காட்டில் தோன்றிய அடிகள் 'திருவெண்காட்டு அடிகள்' என்று கூறப்படாமல் பட்டினத்தடிகள் கி. பி. 10-ஆம் நூற்றாண்டில் கூறப்பட்டிருப்பதை நோக்க, திருவெண்காடு பழைய காவிரிப்பூம் பட்டினத்தின் ஒரே பகுதியாகவே பண்டையோர் கருதிவந்தனர் என்பது நன்கு விளங்கும். இவ்வாறு நுணுக்கமாக கவனித்துவரின், இன்றுள்ள காவிரிப்பூம்பட்டினத்திலுள்ள பல சிற்றூர்கள் பண்டைப் பூம்புகாரின் நகரப் பகுதிகளே என்பதை நன்கறியக்கூடும்.

கடற்கரை

புகார்த்துறையில் கடலில் வரும் மரக் கலங்களைக் கரை நோக்கி அழைக்கும் கலங்கரை விளக்கம் இருந்தது. துறை

* சிலப். காதை 5. வரி 133.

முகத்தில் பல நாட்டுக் கப்பல்களும் தத்தம் கொடிகள் அசைந்தாட நின்றுகொண்டிருந்தன. அவற்றில் மலைதரு பண்டங்களும், கடல்தரு பண்டங்களும், நிலமளிக்கும் பண்டங்களும் ஏற்றப்பட்டன ; இறக்கவும் பட்டன. அயல்நாட்டுக் கண்ணுடிப் பொருள்கள், பட்டாடைகள், குடி வகைகள், பலவகை இயந்திரப் பொருள்கள் முதலியன இறக்குமதியாயின. கடலோரமாகவே கங்கை வரை சென்று வட இந்தியப் பொருள்களை இறக்குமதி செய்த சோழநாட்டுக் கப்பல்களும் துறைமுகத்திலிருந்தன.* இப் பொருள்களை இறக்கிக் கணக்கெடுக்கவும், ஏற்றுமதிப் பொருள்களைக் கணக்கிட்டுச் சோழர் முத்திரையாகிய புலி முத்திரை பொறிக்கப்பட்ட மூட்டைகளைக் கப்பலில் ஏற்றவும், நூற்றுக்கணக்கான மக்கள் துறைமுகத்தில் வேலை செய்தனர். இறக்குமதியாகும் பொருள்களைத் தீர்வை வரையறுத்துக் கடமை (Custom) கொள்ளும் ஆயத்துறை (Custom House)கள் இருந்தன ; பிறகு அப் பண்டங்கட்குச் சோழனது இலச்சினையை இட்டு, அவற்றை இட்டுவைக்கும் பண்டகசாலைகள் (Ware Houses), கிடங்குகள் (Godowns), உயர்ந்த மேடைகள் (Docks and piers) இருந்தன. காவிரி கடலொடு கலக்கும் சங்க முகத்திற்கு அயலதாகிய பூக்கள் மலர்ந்த நெய்தற்கானலிடத்துச் சோமகுண்டம், சூரியகுண்டம் என்னும் பெயரையுடைய இரண்டு குளங்கள் இருந்தன. அவற்றில் மூழ்கிக் காமனைத் தொழுபவர் இம்மையினும் மறுமையினும் கணவனைவிட்டு நீங்கார் என்று தேவந்தி என்ற ஒரு தோழி கண்ணகிக்குக் கூறினாள்.†

காவிரிப்பூம்பட்டினம் வாணிகச் சிறப்பால் அக் காலத் தமிழகத்தில் சிறப்புற்றிருந்தது. அதனாற்றான் இளங்கோவடிகள்,

> "இருநில மன்னற்குப் பெருவளங் காட்டத்
> திருமகள் புகுந்ததிச் செழும்பதி யாம்"

எனப் பாராட்டி,

> "காலை யரும்பி மலருங் கதிரவனும்
> மாலை மதியமும்போல் வாழியரோ—வேலை
> அகழா வமைந்த அவனிக்கு மாலைப்
> புகழா வமைந்த புகார்"

என்று உளமார வாழ்த்தி அருளினார்.

---

* Foreign notes of South India p. 59.

† சிலப். காதை 9. 57-62.

பிற்காலத்தின் பூம்புகார்

கோவலனுக்குப் பிறகு மாதவியும் மணிமேகலையும் வாழ்ந்த காலத்தில் பூம்புகார் கடல்கொண்டு விட்டதாக மணிமேகலைக் காவியம் கூறுகிறது. அஃதாவது கடல் உள்நோக்கி வந்ததென்பது பொருள். இதனால் காவிரிப்பூம்பட்டினம் முழுவதுமே அழிந்துவிட்டது எனக் கருத இடமுண்டாகிறது. ஆயின் கி. பி. 5-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த புத்ததத்தர்*, கி. பி. 7-ஆம் நூற்றாண்டில் வாழ்ந்த திருஞானசம்பந்தர் என்பவர் கூற்றுக்களிலிருந்து காவிரிப்பூம்பட்டினம் வளத்துடன் இருந்ததென்பது தெரியவருகின்றது. மேலும் சம்பந்தர்க்கும் சுந்தரர்க்கும் இடைப்பட்ட காலத்தில் வாழ்ந்த இயற்பகை நாயனார் காலத்திலும் பூம்புகார் ஓரளவு நன்னிலையிலிருந்ததாகத் தெரிகிறது. இவற்றை நோக்க மணிமேகலை கூறும் கடல்கோள், நகரத்தின் கடற்கரைப் பகுதியை அழித்திருக்கும் என்று கொள்ளுதல் பொருந்தும்.

புத்ததத்தர் கூற்று

மேலே கூறப்பெற்ற புத்ததத்தர் ஒரு பௌத்த சமயப் பெரியார். இவர் "அபிதர்மாவதாரம்" என்னும் நூலைச் சோழ நாட்டில் இருந்து எழுதியவர். இவர் "காவிரிப்பூம் பட்டினம் செல்வ வணிகரைக் கொண்டது; மாடமாளிகைகள் நிரம்பியது; இனிய பூஞ்சோலைகளை யுடையது; அரண்மனைகளைக் கொண்டது. கண்டதாசன் கட்டிய புத்த விகாரத்தில் நான் இருந்து, என் மாணவி சுமதியின் வேண்டுகோளால் இந்நூலை எழுதினேன்," என்று மேற்சொன்ன தமது நூலின் ஈற்றிற் குறித்துள்ளார்.†

சம்பந்தரும் பூம்புகாரும்

இன்றுள்ள சாய்க்காட்டுக் கோயிலும் அதற்குக் கிழக்கே யுள்ள பல்லவன் ஈச்சரமும் சம்பந்தர் பாடல் பெற்றவை. "மாளிகைகள் நிறைந்த வளப்பம் மிகுந்த புகாரை அடுத்துச் சாய்க்காடு இருந்தது. அங்கு மலர்கள் பூத்த வாவிகள் பல. அங்குச் சோலைகள் மிகுதி. புன்னை மரங்களும் உண்டு. சோலைகளில் மயில்கள் ஆடும். கோவிலில் பேரி முதலிய வாத்தியங்கள் முழங்கும்," என்று சம்பந்தர் திருச்சாய்க்காட்டுப் பதிகத்துள் கூறியுள்ளார். மேலும் அவர், "வெண் மாட நெடு

---

* History of the Poly Literature by B. C. Law. Vol. 2. pp. 384, 385, and 389.

† K. A. N. Sastry's Cholas Vol. 1. top. 120-121.

வீதித் தண் புகார்ச் சாய்க்காடு," "பூம்புகார்ச் சாய்க்காடு," "காவிரிப்பூம் பட்டினத்துச் சாய்க்காடு,"

"மங்குல்தோய் மணிமாடம் மதிதவழும் நெடுவீதிச்
சங்கெலாம் கரைபொருது திரைபுலம்புஞ் சாய்க்காடு"

"தையலார் பாட்டோவாச் சாய்க்காடு"

என்று கூறியிருத்தலை நோக்குக.

குழல், வீணை, மொந்தை, முழவு இவை ஒலிக்க, நடன மாதர் கழலின் ஓசை ஆர்க்க மக்கள் பூம்புகாரைச் சேர்ந்த பல்லவனீச்சரத்தை வழிபடுகிறார்கள். தண்டு, உடுக்கை, தாளம், தக்கை ஒலிக்க பல்லவனீச்சரத்தில் நடனமாதர் நடமிடுகின்றனர்," என்று சம்பந்தர் பல்லவனீச்சரப் பதிகத்தில் குறித்துள்ளார். இம் மேற்கூற்றுச் சான்றுகளால் கி. பி. 7-ஆம் நூற்றாண்டு வரையில் பூம்புகார் போற்றத்தக்க வளநகரமாக இருந்திருப்பதை நன்கறியலாம்.

இன்றைய புகார்*

மாயூரத்திலிருந்து காவிரிப்பூம்பட்டினம் போகும் பாதையில் 12 கல் அளவில் கைகாட்டி மரம் ஒன்று இருக்கின்றது. அதிலிருந்து கடற்கரைவரை ஒரே சாலை 3 கல் தொலைவிற் போகின்றது. அதன் இருபுறமும் வீடுகள் இருக்கின்றன. அங்கிருப்பவர் பழங்குடி மக்கள். இரண்டு அக்கிரகாரங்கள் இருக்கின்றன. அங்கு மறையவர் இருக்கின்றனர். சாலையிலிருந்து பிரிந்து செல்லும் கிளைப்பாதைகள் மேடு பள்ளங்கள் உடையன. சாலைக்கு இடப்புறமே சிறு குடியிருப்புகள் மிகுதியாக இருக்கின்றன. சாலைக்கு இருபுறத்திலும் பழைய உறை கிணறுகள் காணக்கிடக்கின்றன. 'இங்கு நாங்கள் கிணறுகள் தோண்டுவதில்லை. இவையெல்லாம் பழையகாலத்துக் கிணறுகள்,' என்று அங்குள்ளார் கூறுகின்றனர். நெடுந்தெருவிற்கு இடப்புறம் சிறிது தொலைவில் பெருந்திடல்கள் இருக்கின்றன. 'அவை அக்கிரகாரம் இருந்த இடம்; வேளாளர் தெரு இருந்த இடம் என்று எங்கள் பாட்டனார் சொல்லக் கேட்டோம்,' என்று 80 வயதுடைய கிழவர் ஒருவர் சொன்னார். அத்திடலைச் சுற்றிலும் வயல்கள் இருக்கின்றன. திடல்கள் மட்டும் தோண்டப்படவில்லை. எங்குத் தோண்டினாலும் பழைய செங்கற்கள், மட்பாண்டச் சிதைவுகள் காணக்கிடக்கின்றன.

* இப்பண்டை நகரம் இருந்த இடத்தை யான் 12-3-43-ல் சென்று பார்வையிட்டேன். இதற்கு உதவி புரிந்தவர், திருவெண்காட்டுத் திருக்கோயில் பொறுப்பாளர் திருவாளர் பாலசுப்பிரமணிய முதலியார், கணக்கப்பிள்ளை சிதம்பரநாத முதலியார், புவனகிரி சிதம்பர முதலியார் என்னும் பெருமக்களாவர்.

அவற்றுள் சில புதுவையை அடுத்த அரிக்கமேட்டில் கிடைத்த மட்பாண்டச் சிதைவுகளை ஒத்துள்ளன. ஓரிடத்தில் பழைய செங்கற்கள் 10 அடி ஆழத்திலிருந்து அப்புறப்படுத்தப் பட்டிருந்தது. அவற்றுள் ஒன்றை அளந்தேன். நீளம் 9 அங்குலம், அகலம் 6 அங்குலம், கனம் $1\frac{1}{2}$ அங்குலமாகும். அதற்கும் புதிய கற்களுக்கும் வேற்பாடு நன்கு தெரிகிறது.

கோவில்கள்

இம் மூன்றுகல் நீளமுள்ள பாதை நெடுகப் பல சிறிய பழைய கோவில்கள் இருக்கின்றன. இவை பலவகைப் பட்டவை; (1) கீற்றுக் கூரையும் சுவர்களும் உடைய கோவில்கள், (2) செங்கற் சுவர்களும் ஓட்டுக் கூரையும் கொண்ட கோவில்கள். ஒரே அறை; அதைச்சுற்றி நாற்புறமும் அகன்ற திண்ணை; அறையுள்ளே சுதையால் இயன்ற சிலைகள்; சுவர் மீது கடவுளர் ஓவியங்கள்; சில உள்ளறைகளில் கற்சிலைகள் இருக்கின்றன. கூரைமீது கலசம்கொண்ட கோவில்கள் பல; சில இடங்களில் மூன்று கலசங்கள் இருக்கின்றன. இத் தகைய பழைய கோவில்கள் பிற இடங்களில் காண்டல் அருமை.

காவிரிக்கு வலப்புறம்

காவிரிக்கு அப்பால் பெரிய மேடான இடம் பரந்து கிடக்கிறது. அதுவே பழைய பூம்புகார் நகரின் சிறந்த பகுதி என்று அங்குள்ளோர் கூறுகின்றனர். அம் மேட்டின்மீது பரதவர் குடில்கள் அமைத்து வாழ்கின்றனர். அவ்வழி வந்த அம்மை ஒருத்தியைக் கண்டு, 'அங்குத் தோண்டிப் பார்த்தீர்களா?' என்று கேட்டேன். அவ்வம்மை, "அங்கு அகழ்ந்தது இல்லை," என்று விடையிறுத்தாள். நான் திடுக்கிட்டேன். ஏன்?

> "அகழ்வாரைத் தாங்கும் நிலம்போலத் தம்மை
> இகழ்வார்ப் பொறுத்தல் தலை"

என்ற குறள் நினைவிற்கு வந்தது. இக்காலத்தில் பண்டிதரும் பயன்படுத்தாத 'அகழ்தல்' என்ற தூய தமிழ்ச்சொல்லைக் கல்வி அறிவற்ற ஓர் அம்மை எளிமையாக உச்சரித்தாள் என்பது வியப்பே அன்றோ! பூம்புகார் அழிந்தாலும் பூம்புகார்க் காலத்துத் தமிழ்ச்சொல் அழியவில்லை என்பதை உணர்ந்து மகிழ்ந்தேன். சங்கமுகத் துறையில் தமிழ் உணர்ச்சியுடையார் நிற்பின், சங்ககால நினைவு எழும் என்பதிலோ—மாதவி பாடிய கானல் வரிப்பாடல் நினைவு எழும் என்பதிலோ ஐயம் இல்லை! இல்லை!!

---

*இது நல்ல சமயம்

[திரு. சா. கூர்மாவதாரக்கோன்]

சிவஞானச் செல்வர்களே! செந்தமிழ் அன்பர்களே! என் அருமைத் தாய்மார்களே! எனக்கும் என்போன்ற தமிழ்ப் பேரறிஞர் பலர்க்கும் உண்டியும், உறையுளும், சிவஞானபோதச் சிற்றுரைப் பயிற்சியும் தந்துதவிய இது நல்ல சமயம் அல்லவா? கடவுள் உண்டு என்ற கொள்கை மாறி, இல்லையென்ற கொள்கை வலிபெற்றுவரும் இச்சமயத்திலும் இதுபோன்ற சைவசித்தாந்த நூல்களையும் கொள்கைகளையும் பரப்புவதாகிய இது நல்ல சமயமல்லவா? தமிழாசிரியர்கள் கடவுட்கொள்கை யற்றவர் கள் என்று சில உண்மையுணராதார் கூறும் போலிக்கூற்றை மறைப்பதற்குப் புலவர் கூடிப் புகழ்பெறும் இது நல்ல சமய மல்லவா? எல்லாச் சமயங்களையும் குறையென நீக்கி, இறை யருள் நிறைந்ததும், அஞ்செழுத்துண்மை கண்டதுமாகிய சைவ சித்தாந்தமே சிறந்ததெனக் கூறும் இது நல்ல சமயமல்லவா?

எளிமை

அறிவுடைப் பெருமக்களே! நம் சைவசமயம் அருணகிரி இசைக்கழகத்திற்குள்ளும், இதுபோன்ற இன்னும் பல நிலையங் களிலும், புலவர்களுக்கு மாத்திரம் விளங்கும் நூலளவிலும் நின்றுவிடாமல் எளிய நடையில் யாவர்க்கும் விளங்கும்படி சிற்றூர்தோறும் சென்று அவ்வூரார் உள்ளங்கவரும் வண்ணம் சைவசமய உரைகள் பல நிகழச்செய்து, அதனால் உலகெலாம் பரவும்வகை செய்தல் வேண்டும்.

நாட்டுப்பாடல்

நாட்டில் எளிய வாழ்க்கை நடத்தும் மக்களிடத்தில் எவ்வாறு சைவம் பரந்து கிடந்தது என்பதைச் சொல்லச் சமயம் போதாது. ஆயினும், இந்த நல்ல சமயத்தில் இரண் டொரு நாட்டுப் பாடல்கள் மூலம் விளக்குகிறேன். இலக்கண இலக்கியங்கள் நிரம்பக்கற்ற ஒரு புலவன் இவ்வளவு கீழ்நிலையில் இறங்கி நாட்டுப்பாடலுக்குப் போய்விட்டானே என்று அறிஞர் கள் இகழக்கூடாது. தேன்பாகு போன்றது தெம்மாங்கு. கேளுங்கள், ஆராய்ந்து பாருங்கள்.

"கறுத்தக் கறுத்தாடு கருவேலங் காய்தின்ற ஆடு
மேத்தக் கறுத்தாடு மேமலையை நோக்குதையா"

---

* நெல்லைச் சித்தாந்த வகுப்பில் நிகழ்த்திய சொற்பொழிவு.

இஃது ஓர் ஆட்டுக்காரன் பாடியது. இதனை நான் கேட்டவுடன் எனக்கோர் ஆட்டம் உண்டாகியது.

இதன் தத்துவக் கருத்தாவது: ஆணவத்தால் மறைப்புண்டு கிடந்த ஆன்மா ஆண்டவன் அருளை நாடுகிறதென்பது.

வேறொரு பொருள். கருநிறமுள்ள ஆடு கருவேலங்காய் தின்ன மலைமீது ஏறுகிறதென்பது.

ஆடு - ஆன்மா, ஆடு. கருவூலம் - கடவுள், கருவேலம் எனத் திரிந்து நின்றது. மேல்மலை என்பது மேமலை என மருவியது. கைலையைக் குறிக்கும்.

“ செம்புள்ளியாட் டுக்காரா சிவத்த மச்சான் ஏசோழுந்தா
செத்தே வளந்தி யானுச் செத்திருவேன் ஒமேலே ”

இது தலைவி, தலைவன்மீது காதல் மீக்கூர்ந்து பாடியது. அகப்பொருட் கருத்து நிரம்பியது.

இதன் தத்துவக் கருத்தாவது: சிவந்த புள்ளிகளையுடைய புலித்தோலாடை யணிந்த செம்மேனிக் கூத்தப்பெருமானே! என்மீது உன் கருணையைக் கொஞ்சம் காட்டினால் உன்னோடு இரண்டறக்கலந்து இன்புறுவேன் என்பது வேறு ஒருபொருள்.

செம்மறியாடு மேய்க்கின்ற ஏ மச்சான், என்மீது உன் அன்பு மிகுமானால் நாமிருவரும் ஈருடல் ஒருயிராகக் கலந்து விடுவோம் என்பது.

ஆட்டுக்காரன் - நடராசப்பெருமான். சிவத்த - செம்மையான. சற்றே என்பது, சத்தே என்று மாறி, செத்தே என வந்தது. உன்மேலே என்பது ஒமேலே என வந்தது.

இவைபோன்று இன்னும் பல தெம்மாங்குப் பாட்டுக்களும், ஏற்றப் பாட்டுக்களும், தாலாட்டுப் பாட்டுக்களும், அழுகைப் பாட்டுக்களும், விளையாட்டுப் பாடல்களும் எண்ணிறந்தனவாய்ச் சைவ மணங்கமழ்ந்து பரவிக்கிடக்கின்றன. சைவ சித்தாந்த சங்கத்தார் அவற்றையெல்லாம் ஆராய என்னைத் தூண்டிவிட்டனர். சமயம் வாய்க்குமிடத்து அவற்றை நம் செல்வி வாயிலாகத் தொகுத்தெழுதுவேன். நமக்குச் சைவ சமயமாகிய இதுவே நல்ல சமயம். இதனைப் பரப்ப இதுவே நல்ல சமயம் என்று மறுமுறையும் கூறி என்னைச் சொற்பொழிவாற்றச் செய்த உங்களுக்கு நன்றி கூறி என் சிற்றுரையை முடிக்கிறேன்.

*திரு உந்தியார்

[திரு. வித்துவான், ந. சேதுரகுநாதன்]

திரு உந்தியார் என்ற அருமையான நூல் திருவியலூர் உய்யவந்த தேவநாயனாரால் இயற்றப்பட்டது. பேரின்ப வெள்ளத்தில் நீந்தித் திளைத்த உவகை மேலீட்டால் கொந்தளித்துத் துள்ளி விழுந்த உள்ளமானது, உந்திஉந்திக் குதித்து உந்தியார் என்ற பாடல்களை வெளியிட்டது. பேரின்பம் நுகர்ந்து நுகர்ந்து தோய்ந்த அவரது அருமையான திருவுள்ளத்திலிருந்து வந்த பாடல்கள் நினைக்குந்தோறும் பேசுந்தோறும் உணருந்தோறும் அனைத்தெலும்பும் உள்ளே நெகிழும்படி ஆனந்தத் தேன்சொரியும் இறைவனைப்போல இன்பமான பாடல்கள். என்றாலும் அதனை உணர்வதற்கு மாசற்ற உள்ளம் வேண்டும். "தீதற்றோர், உள்ளுதோ றுள்ளுதோ றுள்ளம் உருக்கும்," என்பது திருஉந்தியாருக்குச் சாலவும் பொருந்தும். பூவின் நறுமணத்தை உணருதற்கு மூக்கு வாயிலாக உள்ளது. மூக்கினாலன்றி மணம் உணரமுடியாது. அதுபோல இறைவனை உணர்ந்து துய்ப்பதற்கு உடம்பில் குறிப்பிட்ட இடம் உண்டு. அந்த இடத்தை முனிவர்களும், தவச்செல்வர்களும் மிகவும் மறைபொருளாக வைத்திருக்கின்றார்கள். அவர்களால் உணர்த்தப்பட்டாலன்றி இறைநிலையை உணரமுடியாது. குருவருளின்றிச் சைவசித்தாந்தம் உணருவது ஒருநாளும் முடியாது.

"ஒருகோடி ஆகமங்கள் எல்லாம் உணர்ந்தும்
பெருகுதவம் சித்தியெல்லாம் பெற்றும்—குருவருளால்
வைத்த படியிருக்க மாட்டாத மாந்தருக்குச்
சித்தசல னம்மாந் தினம்"

என்று அருளிச்செய்த குருஞானசம்பந்த சுவாமிகளின் சிவபோகசாரத் திருமொழிகளையும் நோக்குங்கள். உயிர்நிலைக்கும் இறைநிலைக்கும் இடையில் மறைத்து நிற்கும் மாயைத் திரைக் கூட்டங்களே தத்துவங்கள். அந்தத் திரைகள் ஒடுங்கினாலன்றி இறைவனைக் காணுதல் இயலாது. உயிர்நிலையை உணர மனநிலையை உணரவேண்டும். இறைநிலையை உணர இவைகளெல்லாம் கட்டாயம் தெரிதல்வேண்டும். தமிழ்நாட்டில் இந்த அரியமறையை நெடுங்காலமாகவே பெரியோர்கள் உணர்ந்து வைத்திருக்கின்றார்கள். மாயைத் திரையை ஒடுங்கச் செய்வதே தீட்சை என்று கூறப்படும். அது ஏமாற்று வித்தையல்ல. அது உண்மையான பேரின்ப வெள்ளத்தில் திளைக்கச் செய்யும் வழி.

---

* நெல்லைச் சித்தாந்த வகுப்பில் நிகழ்த்திய சொற்பொழிவு.

" உரையிறந்தால் உன்னும் உணர்விறந்தால் மாயைத்
திரையிறந்தால் காண்கின்ற தேவை—வரைபெருக்
வாசிப்பதும் வாயால் வாழ்த்துவதும் நாடகமாய்ப்
பூசிப்பதும் சுத்தப் பொய்."

வாசிப்பது வாழ்த்துவது பூசிப்பது வேண்டாமென்பது அல்ல கருத்து. மாயைத் திரை நீங்கிய பின்புதான் வாசிப்பதும் பூசிப்பதும் வாழ்த்துவதும் பயன்படும். நினைத்த அளவில் நினைவு அழியும்படி உருகிப் பாய்ந்து உவட்டாத இன்பம் ஊட்டு வாள் இறைவி. யாருக்கு? இறைநிலையை உணர்ந்தவருக்குத் தான். அதைத்தான் உந்தியார் கூறுகிறது.

" கருதுவ தன்முன் கருத்தழியப் பாயும்
ஒருமகள் கேள்வனென் றுந்தீபற
உன்ன அரியனென் றுந்தீபற."

என்பது உணர்ந்து துய்த்துக்கூறிய திருமொழி. குரு குறிப் பிட்டு உணர்த்திய இடத்தை நோக்கிய அளவில் இறைவன் குழைந்து உருகி இன்பந் தருவான்.

" தாக்கியே தாக்காது நின்றதோர் தற்பரம்
நோக்கிற் குழையுமென் றுந்தீ பற
நோக்காது நோக்கவென் றுந்தீபற."

என்பதன் உண்மையைத் துய்த்து உணரவேண்டும். உள்ளும் புறம்பும் நினைப்பற்று உன்னுள்ளே சுரக்கும் மொள்ளா அமுத வெள்ளத்தில் திளைக்க உந்தியாரைப் போல உதவுகின்ற நூல் ஏது? அதனை உணர்கின்றவர்கள்தாம் சிறந்த தவம் உள்ளவர் கள். தமிழுலகம் அத்தகைய அரியநெறியை அடைவதாக!

ஒப்புமை

" அன்றிவரும் ஐம்புலனும் நீயும் அசையாதே
நின்றபடி யேநிற்க முன்னிற்கும்—சென்று
கருதுவதன் முன்னம் கருத்தழியப் பாயும்
ஒருமகள்தன் கேள்வன் உனக்கு."

" ஆக்கப் படாத பொருளாய் அனைத்தினினும்
தாக்கித்தான் ஒன்றேடும் தாக்காதே—நீக்கியுடன்
நிற்கும் பொருளுடனே நிற்கும் பொருளுடனாய்
நிற்கை நிராதார மாம்."

—திருக்களிற்றுப்படியார்-ருடு, உசு.

சிவமுருகன் தமிழ்

*சைவசித்தாந்தத்தின் தொன்மை

[By டாக்டர் தி. இரா. அண்ணாமலைப்பிள்ளை
L. C. P. S., L. M. S. S. A. Lond. திருக்குற்றாலம், (தென்காசிவழி)]

சைவசித்தாந்தப் பொருள்

சைவசித்தாந்தம் என்னும் சொற்றொடரின் பொருள் என்னை? சிவசம்பந்தமானது சைவம் என்பது திருமந்திரம். சித்தாந்தம் என்பது முடிந்த முடிபு. சிவம் என்னும் திருப்பெயர் தென்னாட்டில் எல்லாம் வல்ல முழுமுதற்கடவுளைக் குறிக்கும். சித்தாந்தம் என்னும் சொல் தென்னிந்தியாவில், பல்லாயிர ஆண்டுகளாக எட்டுத்திசைகளிலும் வழங்கப்பட்டு வருகின்றது. தொன்மை என்பது பழமை. ஆகவே, சிவசம்பந்தத்தைத் தன் அறிவாலும் அளவைகளாலும் ஆராய்ந்து சிந்தித்து இறைவன் அருளால் தெளிந்து, அவனுடைய திருத்தாள்களைத் தன் பட்டறிவிற் (அனுபவத்திற்) கண்டு அறுதியிட்டு முடிவுகட்டிய திருநெறியே 'சைவ சித்தாந்தம்' ஆகும்.

சிவன் என்னும் சொல் விளக்கம்

சிவன் என்னுஞ்சொல் தமிழ்ச்சொல் என்றும் 'சி' என்னும் ஓசை (Cerebral) தென்னிந்திய மொழிக்கே உரியதென்றும், சிவன் கோயில்கள் பண்டைக்காலத்தில் வடஅமெரிக்காவிலும் மற்றும் வேறு கண்டங்களிலும் பரவி இருந்தனவென்றும், சிவன் என்னுஞ்சொல்லும் அல்லது அதன் திரிபும், உலகத்தில் எங்கும் ஊர்களுக்கும், மலைகளுக்கும், இலிங்கத்துக்கும், திருக்கோயில்களுக்கும் ('சிவ' என்னுஞ் சொல்லின் பொருள் தெரிந்தும் தெரியாமலும்) வழங்கப்பட்டு வருகின்றதென்பது ஆராய்ச்சி வல்லுநர்கள் கூற்று. எந்நாட்டவர்க்கும் இறைவனாய் விளங்குகின்றவன் தென்னாட்டில் 'சிவன்' என்றழைக்கப்பட்டனன்.

> "யாதொரு தெய்வங் கொண்டீர் அத்தெய்வ மாகி ஆங்கே
> மாதொரு பாக னார்தாம் வருவர்"

என்று அருணந்தி சிவமும்,

> "விரிவிலா அறிவி னார்கள் வேறொரு சமயம் செய்து
> எரிவினாற் சொன்னா ரேனும் எம்பிராற் கேற்ற தாகும்"

என்று அப்பர் அடிகளும் கூறியவாறு, பல சமயங்களையும் தத்துவ அடிப்படையில் முறைப்படுத்தித் தன்னுடன் பிணைத்துக் கொள்ளும் பரந்த நோக்கம் (Catholicity) சைவ சமயத்திலே சிறப்பாகக் காணப்படுகின்றது.

---

* நெல்லைச் சித்தாந்த வகுப்பில் நிகழ்த்திய சொற்பொழிவு.

ஆண்டவன், உருவமாயும், அருவமாயும், அருவுருவமாயும், தத்துவங்கடந்த தனிப்பொருளாயும் உள்ளவன் என்பது சைவ சித்தாந்தத்துக்கு அடிப்படையாகும்.

சைவசித்தாந்தக் கொள்கைகளுக்கும் விஞ்ஞானக் கருத்துக் களுக்கும் நெருங்கிய பொருத்தங்காணப்படுகின்றது.

சைவசமயக் கொள்கைகளுக்கும் தமிழ்நெடுங்கணக்கு எழுத்துக்களுக்கும் சிறந்த ஒற்றுமை காணப்படுகிறதென்பது எம்போலிகளின் துணிவு.

சிவ வழிபாடு புதுக் கற்காலத்திலேயே (New Stone age) 20000 (இருபதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரே) தொடங்கிய தென்பது ராப்சன் பேராசிரியர் (Prof. Rapson) "Ancient India" என்னும் நூலிற் குறித்துள்ளனர். சரித்திரகாலத்துக் கும் முந்தியது சைவசமயம் என்பது டாக்டர் போப் (Dr. Pope) அவர்களின் உறுதிமொழி. சர் ஜான் மார்ஷல் துரை, "உலகத் திலேயே பழமைவாய்ந்ததும் இன்றும் நிலவி வருவதும் ஆகிய சமயம் சைவசமய மென்றும் ("the most ancient living faith in the world") வலியுறுத்துகின்றனர்.

சைவமும் புதைபொருள் ஆராய்ச்சியும்

சிந்து ஆற்றங்கரை ஓரங்களில், மொகஞ்சதாரோ, ஹரப்பா என்னும் மறைந்த நகரங்களில், புதைபொருள் ஆராய்ச்சியாளர் கள் கண்டெடுத்துள்ள பொருள்களே நம்நாட்டு வரலாற்றிலே மிகத் தொன்மையானவை. இவ்வூர்களிற் பரவியிருந்த நாகரிகம் ஏறக்குறைய ஆறாயிரம் (6000) ஆண்டுகளுக்கு முந்தியதென்பர் விஞ்ஞானிகள் (Geologists and Archaeologists). இலிங்கம், சங்கு, யானை, இடபம் (காளை-நந்தி), வேல், பாம்பு முதலியனவும், இவைபோன்றவை பொறிக்கப்பட்டுள்ள நாணயங்கள் அழிந்து போன இந்நகரங்களில் மலிந்து காணப்பட்டுள்ளன. பண்டைக் காலத்தில் நம்முன்னோர், திங்கள், நாள், கோள், மீன் இவைகளுக் குத் தகுந்தாற்போல் பெருமானையும் பெருமாளையும் மற்றும் பல திருவுருவங்களையும், முழுமுதற் கடவுளின் பல தோற்றமாக நினைந்து வணங்கி வந்தனர். "சிவன் சத்தி" யென்பது இரண்டு பொருளல்ல. சிவனின்றிச் சத்தியில்லை, சத்தியின்றிச் சிவனில்லை என்னும் கருத்துக்கேற்ப, முழுமுதற்கடவுள் "ஒருவன் என்னும் ஒருவன்" என்று கொண்டனர். ஆதலின் திருமூலர்,

> "ஆதிப் பிரானும் அணிமணி வண்ணனும்
> ஆதிக் கமலத்து அலர்மிசை யானும்
> சோதிக்கில் மூன்றுந் தொடர்ச்சியில் ஒன்றெனர்."

யென்று கூறிப்,

"பேதித் துலகம் பிணங்குகின் றார்களே."

என்று வருந்துகின்றனர்.

முப்பொருள் வாய்மை

இலிங்கமும் நந்தியும் காணுமிடமெல்லாம், அவைகளின் குறிப்பென்னை? வரம்பில்லாத ஆற்றலுடைய ஆண்டவன் முன்னிலையில், பக்குவப்பட்ட உயிரானது (ஆன்மா) ஆண்டவன் திருவடிகளை அணுகி, என்றும் மீளா இன்பத்தைத் துய்த்துக் கொண்டேயிருக்கின்றது என்பதேயாகும். இத்தகைய கடவுட் கொள்கை மொகஞ்சதாரோயர் காலத்திலேயே திருந்திய முறையில் காணப்பட்டதாயின், அக்காலத்துக்கு 3000, 4000 ஆண்டுகளுக்கு முன்னரேயே அச்சமயம் அந்நாட்டில் தொடங்கியிருக்க வேண்டுமென்று கூறுவது அறிவுக்குப் பொருத்தமேயாகும். ஆகவே சைவசமயம், பதினாயிரம் ஆண்டுகளுக்கு முன்னரேயே நமது நாட்டில் திளைத்து முதிர்ந்திருந்த தென்பது புதைபொருள் ஆராய்ச்சியினின்றே மலையிலக்காக விளங்குகின்றது.

மொகஞ்சதரோவில் வழங்கிவந்த சித்திர எழுத்துக்களைப் பற்றி ஐம்பது ஆண்டுகளாக ஓயாது உழைத்துத் தெளிந்து முடிவுகட்டிய ஹீராஸ் முனிவர் (Rev. H. Heras), அக்காலத்திலேயே, கடவுள், முக்கண்ணன் (சிவன்), முருகன் முதலிய திருப்பெயர்களைக் குறிக்கும் சித்திர எழுத்துக்கள், அந்நாட்டு நாகரிகத்தில் முனைத்திருந்தனவென்று மிகத் திறம்பட உறுதிப் படுத்தியுள்ளனர்.

சைவமும் தமிழ் இலக்கியமும்

தமிழ்நூல்களில், மிகப் பழமையானதும் தலைசிறந்து நிற்பதுமான தொல்காப்பியத்தில், 'சிவ' என்னும் வேரினின்று தோன்றியுள்ள 'சிவணிய' 'சிவணி' 'சிவணும்' என்னும் சொல் (இருபது நூற்பாக்களுக்கு மேலேயே), பல இடங்களிற் காணப் படுகின்றன. மேலும்,

"கொடிநிலை கந்தழி வள்ளி யென்ற
வடுநீங்கு சிறப்பின் முதலன மூன்றும்
கடவுள் வாழ்த்தொடு கண்ணிய வருமே."

—தொல். பொருள். அஅ.

"மாயோன் மேய காடுறை உலகமுஞ்
சேயோன் மேய மைவரை உலகமும்
வேந்தன் மேய தீம்புனல் உலகமும்
வருணன் மேய பெருமணல் உலகமும்
முல்லை குறிஞ்சி மருதம் நெய்த லெனச்
சொல்லிய முறையாற் சொல்லவும் படுமே."

—தொல். பொருள். ரு.

"பாங்கருஞ் சிறப்பிற் பல்லாற் ருனும்
நில்லா வுலகம் புல்லிய நெறித்தே." —தொல். பொருள். எ௮.

"நிறைமொழி மாந்தர் ஆணையிற் கிளந்த
மறைமொழி தானே மந்திர மென்ப." —தொல். பொருள். ௪௯௦.

என்னும் நூற்பாக்களுக்கு, சமயத்தொடர்புடைய பொருள் களைத்தவிர வேறு பொருள் கொள்வதிற்கிடமில்லை. இன்னும், அறம், அருள், வேலன், ஓம்படை, பால்வரைதெய்வம், சேயோன் (முருகன்), மாயோன் (திருமால்) முதலிய சொற்கள் காணப் படுவனவற்றினின்றும், தொல்காப்பியர் காலத்திலும் சைவ சமயமே நம்நாட்டில் நிலவியிருந்தது என்பது வெள்ளிடைமலை போல் தெரிகின்றது. சங்க இலக்கியங்களுள் பத்துப்பாட்டு, புறநானூறு, கலித்தொகை, சிலப்பதிகாரம், மணிமேகலை முதலிய நூல்களிலிருந்து அக்காலத்தில் முக்கண்ணன் (சிவன்) வணக்கம் மக்களிடம் ஊன்றியிருந்ததென்பது வெளிப்படை. திருக்குறளிலும், இறைவனை எண்குணத்தானென்றழைப்பத னாலும், 'அ' (எட்டு) என்னும் குறியே அகரத்திற்கும் குறி யீடாய் அமைந்திருப்பதனாலும், இங்கு விரிக்க இடங்கொடாத பல காரணங்களினாலும், அது சமயத்தொடர்புடைய நூல் என்பது நன்கு விளங்கும். பத்துப்பாட்டு, இராமாயணம், பாரதம் முதலிய நூல்களிலும் சிவவழிபாடும் அறக்கடவுளின் பெருமையும் ஆங்காங்கு எடுத்து ஓதப்பட்டுள்ளது. பின்னர், மணிவாசகப்பெருமான், மெய்கண்டதேவர், சேக்கிழார், தாயு மானவர், பட்டினத்தடிகள், சிவஞானமுனிவர், குமரகுருபரர் முதலிய தெய்வப்புலவர்கள் பலரும் ஒருங்கே, சைவசமயக் கொள்கையைக் கடைப்பிடித்து, மீளா அடியார்களாய் உய்ந்து நம்மனோர்க்கு வழிகாட்டியர்களாய் அமைந்துள்ள தனிப் பெருமை அவர்களின் திருமொழிகள் மூலமாய்க் கலங்கரை விளக்கென, உலகமெங்கும் ஒளிர்ந்து கொண்டிருப்பதை உணர்ந்து இன்புறுமலிருக்கமுடியுமா? சமயம் வந்துழி விரித் துரைக்கப்படும்.

சைவத்தின் தொன்மை, பதினாயிரம் ஆண்டுகளுக்கு முந்தியதென்பது இங்கு எடுத்துக்காட்டப்பட்டது. இன்னும் எத்துணைப் பல்லாயிரமாண்டுகளுக்குமுன் சைவசமயம் உலக மக்களிடம் ஊன்றியிருந்ததென்பதை வரலாற்றுச் சான்றுக ளோடு ஆராய்ந்து தெளிவது தமிழர்களும் தமிழன்பர்களும் ஆற்றவேண்டிய முதற்கடமையாகும்.

*அறிவு விளக்கம்

[திரு. வித்துவான், கு. சுந்தரமூர்த்தி, செந்தமிழ்க் கல்லூரி, திருப்பனந்தாள்.]

செந்தமிழ் நலனும், தெய்வத் திறனும் ஒருங்கமையப் பெற்ற பெரியோர்களே! தாய்மார்களே! உங்களனைவருக்கும் எளியனது வணக்கத்தை முதற்கண் தெரிவித்துக்கொள்கின்றேன்.

அறிவுவிளக்கம் என்ற தலைப்பிலே அறிவாவது யாது என்பதைப் பற்றியும், அது விளக்கம் பெறுமாறு யாங்ஙனம் என்பது பற்றியும் உங்கள்முன் சிந்திக்க முன்வந்திருக்கின்றேன். அறிவாவது யாது என்பதைப்பற்றி நாம் சிந்திக்க வேண்டுவதில்லை; நம் அருமைத் திருவள்ளுவர் தாமியற்றிய திருக்குறளிலே பலவிடங்களில் மிகத் தெளிவாகக் கூறியிருக்கின்றார். அவற்றை ஈண்டு ஒருங்கு சிந்தித்தல் தக்கது என்று எண்ணுகின்றேன்.

அறிவு

பெரியோர்களே!

பிறப்பென்னும் பேதைமை கெடச் சிறப்பென்னும் செம்பொருளைக் காணத்தக்கதாய், எவ்வதுறைவது உலகம் உலகத்தோடு, அவ்வதுறையும் அருமைப்பாடுடையதாய், உலகந் தழீஇய நட்பிலே முன்மலர்தலும் பின்கூம்புதலுமின்றி, என்றும் ஒருதன்மைத்தாய் இலங்குவதாய், எண்பொருளவாகச் செலச் சொல்லித் தான் பிறர்வாய் நுண்பொருள் காணும் நுண்மையுடையதாய், எப்பொருள் எத்தன்மைத் தாயினும், எப்பொருள் யார்யார் வாய்க் கேட்பினும், அவ்வப்பொருளினும், அவ்வவர் வாயினும் உண்மையையே கொண்டு விளங்கும் ஒண்மையுடையதாய், குதிரையை நிலமறிந்து செலுத்தும் வாதுவன்போல, மனத்தைப் புலமறிந்து செலுத்தும் புகழ்மையுடையதாய் விளங்குவது எதுவோ, அதுவே அறிவாகும் என்பது அவர் கண்ட உண்மையாகும்.

மெய்யுணர்வு

இத்தகைய அறிவு விளக்கமே நமக்கு இன்றியமையாது வேண்டப்படுவதாகும். இயற்கை யறிவை எல்லோரிடத்திலும்

---

* நெல்லை சித்தாந்த வகுப்பில் நிகழ்ந்திய சொற்பொழிவு.

காண்டல் இயலுமேயன்றி, இவ்விளக்க அறிவை எல்லோரிடத்திலும் காண்டல் இயலாததாகும். அதற்குக் காரணம் பல உளவேனும், தலையாய காரணம் தருக்குடைமையேயாகும். அத் தருக்கு என்னுந் திரையே, மெய்யறிவை மறைத்து, பொய்யறிவை மிகுத்து வருகின்றது. அப்படலமானது நீங்கி, உண்மையறிவை, மெய்ஞ்ஞானத்தைப் பெறவேண்டு மென்றே, அருட்டிரு குமரகுருபர அடிகளாரும் "ஆணவமான படலங் கிழித்து, அறிவிற் காணரிய மெய்ஞ்ஞானக் கண் காட்ட," வேண்டுமென்று, ஆண்டவனிடத்து வேண்டுகின்றார். ஆணவம் நீங்கிய உள்ளமே அன்பிற்கு இருக்கையாகின்றது; அடிமைத் திறத்திற்குக் குடிமையாகின்றது. ஆண்டவனைக் காணும் அருள்நிலை எய்துகின்றது. அத்தகைய அடியவர் கூட்டுறவே, நம் அகந்தையை நீக்கவல்லது, அறிவை விளங்கச் செய்வது. அவ்வாறு அடியவர்களைக் கூடுகின்றபோது, வேற்றுமையின்றி அரன் எனவே அவர்களைத் தொழ, நம் மனத்தகத்திருக்கும் மாசுநீங்கும். இதுவே நம் அகந்தையை நீக்க ஆன்றோர்கள் கண்டவழியாகும்.

எனவே, இதுகாறும் உங்கள்முன் கலந்து சிந்தித்ததிலிருந்து மெய்யறிவு என்பது எது என்பதும், அவ்வறிவை விளங்கவொட்டாது ஆணவம் என்பது மறைத்து நிற்கின்றது என்பதும், அவ்வாணவம் நீங்கி உண்மையறிவைப் பெற அடியவர் கூட்டுறவே சிறந்த கருவியாகும் என்பதும் தெரியவருகின்றது என்பதைக் கூறிக்கொண்டு, இத்தகைய பெரும் பேற்றிற் கெல்லாம் ஆளாக்கிய எங்கள் காசி வாசி ஸ்ரீலஸ்ரீ எசமான் சுவாமிகள் அவர்களின் திருவடிகட்கும், தமிழும் சைவமும் தழைக்க வுழைக்கும் தென்னிந்திய சைவசித்தாந்த சங்கத்தினருக்கும், இவ் வகுப்புச் செம்மையுற நடக்கப் பல்லாற்றானும் பேருதவி புரிந்துவரும் நெல்லை அருணகிரி இசைக் கழகத்தாருக்கும் எனது மனமொழி மெய்களால் வணங்கும் வணக்கத்தையும் நன்றியறிதலையும் தெரிவித்துக்கொண்டு அமைகின்றேன்.

கைகொடுத்தருளல்

"இருட்டரு துன்பப் படல மறைப்பமெய்ஞ் ஞானமென்னும்
பொருட்டரு கண்ணிழந் துண்பொருள் நாடிப் புகலிழந்த
குருட்டருந் தம்மைப் பரவக் கொடுநர கக்குழிநின்
றருட்டரு கைகொடுத் தேற்றுமை யாற னடித்தலமே."

—ஆளுடைய அரசு, ௪. ௯௨-௪.

தென்னிந்திய தமிழ்ச்சங்கம்
புலவர் மாணவர் தேர்வு முடிவறிக்கை

திருநெல்வேலித் தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழக அறநிலையங்களில் ஒன்றான **தென்னிந்திய தமிழ்ச் சங்கத்தின்** சார்பில் சென்ற ஆண்டுபோல் இவ் யாண்டும், சென்னைப் பல்கலைக்கழக வித்துவான் பட்டத் தேர்வுக்கும், வித்துவான் முதனிலைத் தேர்வுக்கும், வித்துவான் புகுமுகத் தேர்வுக்கும் விண்ணப்பித்துள்ள மாணவர்களின் நற்றமிழ் வளர்ச்சி கருதி, திருவையாறு, திருப்பனந்தாள், தருமபுரம், திருமயிலம், திருப்பதி, திருநெல்வேலி, மேலச்சிவபுரி ஆகிய ஏழிடங்களில், 1952 பிப்ரவரி 18உ முதல் புலவர், மாணவர் தேர்வுகள் நடைபெற்றன.

	விண்ணப்பித்தவர்	எழுதியவர்	தேர்ச்சியுற்றவர்
வித்துவான் இறுதிநிலை	18	12	12
வித்துவான் முதனிலை	50	43	39
வித்துவான் புகுமுகம்	49	48	44

இவர்களில்:—

I. வித்துவான் இறுதிநிலைப் பரிசு பெறுபவர்கள்:

பதிவெண் 36. பே. மு. இராசகோபாலன், K. V. S. S. கல்லூரி திருப்பனந்தாள் முதற் பரிசு ரூ. 50 0 0

பதிவெண் 29. இராம. சீனிவாசன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள் இரண்டாம் பரிசு ரூ. 40 0 0.

பதிவெண் 28. சீ. பஞ்சாபகேசன், அரசா கல்லூரி, திருவையாறு மூன்றாம் பரிசு ரூ. 30 0 0

II. வித்துவான் முதனிலையிற் பரிசு பெறுபவர்கள்:

பதிவெண் 80. சா. நாகலிங்கம், ஸ்ரீமத். சிவஞானபாலையசுவாமிகள் தமிழ்க்கல்லூரி, மயிலம், முதற் பரிசு ரூ. 40 0 0

பதிவெண் 89. ம. நல்லசாமி, திருவாவடுதுறை ஆதீன அம்பலவாண தேசிகர், கரந்தைப் புலவர் கல்லூரி, இரண்டாம் பரிசு ரூ. 30 0 0

பதிவெண் 53. அ. பாலசுப்பிரமணியன், K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள் மூன்றாம் பரிசு ரூ. 25 0 0

III. வித்துவான் புகுமுகத்தேர்விற் பரிசு பெறுபவர்கள்:

பதிவெண் 50. ந. பாலம்மாள், திருவள்ளுவர் தமிழ்ப் புலவர் கல்லூரி, திருநெல்வேலி முதற் பரிசு ரூ. 20 0 0

பதிவெண் 92. த. சேயாரமன், S. V. O. கல்லூரி, திருப்பதி இரண்டாம் பரிசு ரூ. 15 0 0

பதிவெண் 80. வ கலியமூர்த்தி, K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள் மூன்றாம் பரிசு ரூ. 10 0 0

பரிசு பெறுகின்றவர்கட்கும், மற்றும் தேர்ச்சியுற்றவர்களுக்கும் தகுதித் தாள்களும் வழங்கப்படும்.

தென்னிந்திய தமிழ்ச்சங்கம்

1952 (பிப்ரவரி 18-முதல்) மாசித் திங்களில் நடத்திய

புலவர் மாணவர் தேர்வுத் தகுதி விளக்கம்

தேர்ச்சியுற்றுத் தகுதித்தாள் பெறுபவர்கள்

வித்வான் இறுதிநிலை

பதிவெண்	பெயர்	தேர்ச்சி விழுக்காடு முறை

முதல் தகுதி

32. தி. சுப்பிரமணியன் —K. V. S. S. *கல்லூரி, திருப்பனந்தாள்.*

இரண்டாம் தகுதி

30. ம. ரா. கிருஷ்ணமூர்த்தி ,,
19. வே. இராமச்சந்திரன்—S. V. O. *கல்லூரி, திருப்பதி.*
31. அ. ஆடியபாதம் —K. V. S. S. *கல்லூரி, திருப்பனந்தாள்.*
24. சி. நடராஜன் —*அரசர் கல்லூரி, திருவையாறு.*
33. க. சாமிநாதன் —K. V. S. S. *கல்லூரி, திருப்பனந்தாள்.*
34. க. கோனேயாண்டி — ,,

மூன்றும் தகுதி

22. க. சேதுராமலிங்கம் —*அரசர் கல்லூரி, திருவையாறு.*
20. உ. க. கோவிந்தசாமி —S. V. O. *கல்லூரி, திருப்பதி.*

வித்வான் முதனிலை

முதல் தகுதி

44. சு. சேனுபதி —*கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.*
64. அ. சௌந்தரநம்பி —*அரசர் கல்லூரி, திருவையாறு.*
79. சு. இராமமூர்த்தி —S. S. B. S. *தமிழ்க் கல்லூரி, மயிலம்.*
85. கோ. ந. மங்கையர்க்கரசி ,,
54. சோ. புண்ணியகோடி—K. V. S. S. *கல்லூரி, திருப்பனந்தாள்.*

92. மோ. கருணைப்பிரகாசம்-கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச் சிவபுரி.
70. அ. துரைராசன் —அரசர் கல்லூரி, திருவையாறு.
46. சி. சிவப்பிரகாசம் —கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
81. ப. வேங்கடாசலம் —S. S. B. S. கல்லூரி, மயிலம்.

இரண்டாம் தகுதி

43. மு. ஏகாம்பரம் —கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
51. தா. கேசவன் —K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
42. அ. காந்திமதிநாதன் —கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
60. பொ. ஆதிகேசவலு —K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
91. வே. பாலசுப்ரமணியம்-கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச் சிவபுரி.
48. அ. சாமிநாதன் —K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
75. சு. சேயந்தீசுவரன் —அரசர் கல்லூரி, திருவையாறு.
61. சா. தா. திருஞானம் —K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
59. வே. ரா. கண்ணப்பர்— ,,
57. கி. இராமசாமி — ,,
58. க. சேயராமன் — ,,
90. மு. சேதுராமன் —கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.
84. வ. ரா. அரங்கநாதன் —S. S. B. S. தமிழ்க் கல்லூரி, மயிலம்.

மூன்றும் தகுதி

55. ச. சம்பூர்ணம் —K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
77. பா. சின்னு —அரசர் கல்லூரி, திருவையாறு.
83. சி. கோபாலகிருட்டிணன் —S. S. B. S. கல்லூரி, மயிலம்.
63. ந. புதுவைநாயகம் —அரசர் கல்லூரி, திருவையாறு.
52. சா. சதாசிவம் —K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.

69. மு. முத்து —அரசர் கல்லூரி, திருவையாறு.
74. பே. சீரங்கன் — ,,
45. V. சபேசன் —கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
66. கா. பண்டரிநாதன் —அரசர் கல்லூரி, திருவையாறு.
82. சா. ஆறுமுகம் —S. S. B. S. கல்லூரி, மயிலம்.
87. தெய்வ இராமநாதன் —கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.
71. வே. சுப்பு ரத்தினம் —அரசர் கல்லூரி, திருவையாறு.
88. அ. வெள்ளியங்கிரி —கரந்தைப் புலவர் கல்லூரி, தஞ்சை.
62. வே. சுப்பிரமணியன் —அரசர் கல்லூரி, திருவையாறு.
76. ந. கோடிப் பிள்ளை — ,,

வித்வான் புகுமுகம்

முதல் தகுதி

76. சு. சரஸ்வதி —K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
78. வே. கோபாலகிருஷ்ணன் ,,
83. ச. சிவநேசன் — ,,
51. தி. ச. இலக்குமி —திருவள்ளுவர் தமிழ்ப் புலவர் கல்லூரி, திருநெல்வேலி.
81. க. அருணசலம் —K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
82. ப. சத்தியமூர்த்தி — ,,
84. இரா. சங்கரநாராயணன் ,,
77. சி. கணேசன் — ,,
63. சொ. இராசு —அரசர் கல்லூரி, திருவையாறு.
62. சி. முத்துசாமி — ,,
52. ச. அரங்கம்மாள் —திருவள்ளுவர் தமிழ்ப் புலவர் கல்லூரி, திருநெல்வேலி.
95. அர. வரதராசன் —கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
67. பே. சௌந்தரராசன் —அரசர் கல்லூரி, திருவையாறு.
79. ச. விசாலாட்சி —K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்
74. ஆ. கலியமூர்த்தி — ,,

இரண்டாம் தகுதி

55. சி. ஆறுமுகம் —அரசர் கல்லூரி, திருவையாறு.
61. வி. சண்முகசுந்தரம் — ,,
71. தி. ந. சிவசண்முகம் —K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
72. சு. இளையபெருமாள் — ,,
75. இரா. சாமிநாதன் — ,,
86. வை. ஆதிமூல நாராயணன் ,,
94. வை. முத்தையன் —கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
64. வ. இலக்குவன் —அரசர் கல்லூரி, திருவையாறு.
49. மு. க. இராமசாமி —கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச் சிவபுரி.
59. தி. கணபதி —அரசர் கல்லூரி, திருவையாறு.
87. அ. சிதம்பரநாதன் —K. V. S. S. கல்லூரி, திருபனந்தாள்.

மூன்றும் தகுதி

56. இரா. கலியமூர்த்தி —அரசர் கல்லூரி, திருவையாறு.
66. க. பண்டித மயில் வாகனன் ,,
89. போ. திருமங்கை ஆழ்வார் —S. V. O. கல்லூரி, திருப்பதி.
73. சே. சிவகுருநாதன் —K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
53. கா. தமயந்தி —திருவள்ளுவர் தமிழ்ப் புலவர் கல்லூரி, திருநெல்வேலி.
60. ப. கௌரிசங்கரன் —அரசர் கல்லூரி, திருவையாறு.
96. P. சதாசிவன் —கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.
90. தே. விசுவநாதன் —S. V. O. கல்லூரி, திருப்பதி.
91. வே. அருணாசலம் — ,,
58. சே. மாணிக்கம் —அரசர் கல்லூரி, திருவையாறு.
85. வ. மணிவாசகன் —K. V. S. S. கல்லூரி, திருப்பனந்தாள்.
47. ந. பார்வதி —கணேசர் செந்தமிழ்க் கல்லூரி, மேலைச் சிவபுரி.
65. சே. அனந்தநாராயணன் —அரசர் கல்லூரி, திருவையாறு.
88. கோ. மு. ஆறுமுகம் —S. V. O. கல்லூரி, திருப்பதி.
93. அ. கந்தசாமி —கீழ்த்திசைப் பல்கலைக் கல்லூரி, தருமபுரம்.

தென்னிந்திய சைவசித்தாந்த சங்கம்

அறிக்கை

இச் சங்கச் சார்பில் புலமை பெற்றுள்ளவர்களும், புலமைப் பயிற்சியுறுகின்றவர்களும் உயிர்க்கு உறுதிபயக்கும் சித்தாந்த நூற்பாடங்களையும் பயின்று தேர்ச்சிபெறுவது சிறப்புடைத்து. அதுபற்றி முன் செல்வி இதழில் வெளியிட்டபடி சித்தாந்தத் தேர்வு 1952 ஜுலை 28க்குச் சரியான ஆடித்திங்கள் 13ம் நாள் சில புலவர் கல்லூரிகளிலும் வேறு குறித்த இடங்களிலும் சித்தாந்தத் தேர்வுகள் நடத்தப்பெறும். புகுமுகத் தேர்வுக்குக் கட்டணம் 0-8-0 வும், முதனிலைத் தேர்வுக்குக் கட்டணம் 0-12-0 வும், வித்துவான் இறுதிநிலைத் தேர்வுக்குக் கட்டணம் 1-0-0 வும் விதிக்கப்பட்டுள்ளன. தேர்வுக்குரிய விண்ணப்பங்கள் 28-6-52-க்குள் அனுப்பப்படவேண்டும்.

இதன் சார்பில் 1952 பங்குனித் திங்களில் நடத்திய
நீதி, சமய பாடத்தேர்வுத் தேர்ச்சிக்குறிப்பு

திருநெல்வேலி மீனாட்சீபுரம் நகரமன்ற மகளிர் உயர்நிலைப்பள்ளி

மூன்றும் படிவம்

1.	சு. சரோஜா	முதற்றகுதி முதற் பரிசு ரூ. 5 0
2.	ச. முத்துமீனு	முதற்றகுதி முதற் பரிசு ரூ. 5 0
3.	சு. சுந்தராம்பாள்	இரண்டாந்தகுதி
4.	V. பொன்னம்மாள்	இரண்டாந்தகுதி

இரண்டாம் படிவம்

வி. ஜானகி — இரண்டாந்தகுதி

திருநெல்வேலி நகர்ப் பெரியதெரு 'செங்குந்தர் ஆரம்பப் பாடசாலை'

ஐந்தாம் வகுப்பு

1.	அ. பேச்சிமுத்து	முதற்றகுதி	தனித்தனி
2.	மு. சங்கர சுப்பிரமணியன்	முதற்றகுதி	ரூ. 20
3.	சோ. சங்கரலிங்கம்	முதற்றகுதி	பரிசு
4.	ஆ. நமசிவாயம்	இரண்டாந்தகுதி	
5.	ம. முருகேசன்	மூன்றாந்தகுதி	

நெல்லை,
5-6-1952

பு. சி. புன்னைவனநாதன்,
புலவர் குழுத்தலைவர்.

செய்திகளும் குறிப்புக்களும்

தூத்துக்குடி சைவசித்தாந்த சபையின்
68-ஆம் ஆண்டு நிறைவு விழா

இவ்விழா நாளிது 1952, மே-24, 25-ஆம் நாட்களில் மிக்க சிறப்பாகக் குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ **தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள்** அவர்கள் தலைமையில் நடைபெற்றது.

இப்பேரவையைத் தேவகோட்டை "சித்தாந்தப் புரவலர்" "தமிழ் வள்ளல்" சிவத்திரு. சேவு. மெய்யப்ப செட்டியார் அவர்கள் தொடங்கி வைத்தார்கள். தொடக்கவுரை பொன்றும் அச்சிட்டு வெளியிடப்பெற்றது. 'திருவாவடுதுறை ஆதீனத் தேவாரப்' பாடசாலைத் தலைமையாசிரியர் சிவத்திரு. சுந்தர ஓதுவாமூர்த்தியவர்கள் முதலியோர்களால் திருமுறை பண்ணுடன் ஓதப்பெற்றது.

அண்ணாமலைநகர் R. C. T. உயர்நிலைப்பள்ளித் தலைமையாசிரியர் திரு. பு. ர. சாமிநாதன் எம். ஏ., எல். டி. அவர்கள், தேவகோட்டை 'சித்தாந்தப்புலவர் மாமணி' திரு. வயிநாகரம், வே. இராமநாதன் செட்டியாரவர்கள், குகத்திரு. முருக. கிருபானந்தவாரியாரவர்கள், திருவாடுதுறை ஆதீனச் சொற்பொழிவாளர் அம்பாசமுத்திரம், திரு. ஆ. முத்துக்குமாரசாமிப் பிள்ளையவர்கள், 'சித்தாந்த கலாநிதி' ஔவை திரு. சு. துரைசாமிப் பிள்ளையவர்கள், அண்ணாமலைநகர், 'சித்தாந்த கலாவல்லி' திருமதி. புர. சா. இராசேசுவரி அம்மையாரவர்கள், குலசைச் சித்தாந்த சைவப்புராணிகர், திரு. ச. முத்துக்குமாரசுவாமி பிள்ளையவர்கள் ஆகியோர் முறையே "அப்பரருளிய ஒண்ணெறி" "சேக்கிழார் செய்யுள் மாண்பு" "பெருந்துணை" (தனிச்சொற்பொழிவு) "ஞானத்தமிழ்" "திருத்தொண்டின் உறைப்பு—ஞானப்பேறு" "அன்னையின் அருந்தமிழ்" "சூரபன்மன்—மயிலும் சேவலும்" (தனிச்சொற்பொழிவு) என்பன பற்றி நன்கு விரிவுரையாற்றினார்கள்.

சிவத்திரு. சுந்தரஓதுவாமூர்த்தி யவர்களாலும், கவுந்தம்பாடி நாட்டாண்மை உயர்நிலைப்பள்ளித் தமிழாசிரியர், திரு. கோ. முருகையா முதலியோர்களாலும் திருமுறை இசையரங்கு இசைக்குழுவுடன் மிக்க சிறப்பாக நடைபெற்றது. அடிகளார் அவர்கள் அச்சிட்ட முன்னுரையும் அருளிய முடிப்புரையும் காலத்துக்கேற்றவாறு செந்நெறியோங்கிச் சிறக்கப் பன்னலம்

நிறைந்த பாங்கமைந்திருந்தமை பாராட்டற்குரியது எனப் பலரும் போற்றினர்.

அடிகளார் அவர்கள், சித்தாந்தப் பேராசிரியர், திரு. ந. சிவ குருநாத பிள்ளையவர்களுக்கு உயரிய பொன்னாடை போர்த்தி நல்லாசி வழங்கி அருளினார்கள்.

கண்டனக் கூட்டம்

1952-ஜுன், 22-ம் நாள் ஞாயிற்றுக்கிழமை மாலை ஏழு மணிக்குத் தூத்துக்குடி, திரு. சங்கரராமேசுவரர் திருக்கோவில் முன்மண்டபத்தில் சித்தாந்தப்பேராசிரியர் திரு. ந. சிவகுருநாத பிள்ளையவர்கள் தலைமையில் இந்து சமயிகளின் கூட்டம் கூடியது. அக்கூட்டத் தீர்மானம் :

வடக்கன்குளத்தில், திரு. ஆறுமுக நாவலரவர்கள் உண்மை உணரச்செய்து முன் அறியாது புகுந்த கிறித்துவர் சிலரை மீண்டும் சைவச் செந்நெறியிற் புகச்செய்தனர். அவர்களை இக்கூட்டம் பாராட்டுகின்றது.

'ஞானதூதன்' என்னும் வெளியீட்டில் 'யானைமேலம்பாரி' என்னும் தலைப்பில் குறித்த செய்தியை இழிவான முறையில் அவதூறு செய்திருப்பதை வன்மையாகக் கண்டிக்கிறது.

இதனைத் தீர ஆய்ந்து வேண்டும் நடவடிக்கைகள் எடுத்தற் பொருட்டுக் கீழ்க்கண்ட தக்கார் குழு அமைக்கப்பெற்றுள்ளது.

தலைவர் : 'சித்தாந்தப் பேராசிரியர்' திரு. ந. சிவகுருநாத பிள்ளை அவர்கள்.

உறுப்பினர் : திரு. சிவ. ந. சின்னக்கண்ணுப் பிள்ளை B.A., B.L. அவர்கள், திரு. பூ. வண்ணமுத்து செட்டியாரவர்கள், திரு A. R. A. S. ஆறுமுகசாமி நாடார் அவர்கள், திரு. சி. பழ. ராம. சிவராமன் செட்டியாரவர்கள், திரு. C. E. நாயகம் B. A. அவர்கள், திரு. கி. ச. சங்கரலிங்க நாடாரவர்கள், திரு. P. R. P. பெரியசாமி நாடாரவர்கள், திரு. E. வெண்ணிமாலைப் பிள்ளை B. A., B. L. அவர்கள், திரு. V. S. சண்முகம் பிள்ளையவர்கள் ஆகியோரும் இவர்களால் சேர்த்துக்கொள்ளப்படுவோரும் ஆவர்.

வேகுப்பட்டித் "தமிழ் மன்றம்"

நிகழும் திருவள்ளுவர் யாண்டு ௧௯௮௩, ஆனித்திங்கள், ௯-ம் நாள் (22-6-1952) மாலை, 5 மணிக்கு மன்றச் சார்பாக, திரு. சொ. மாணிக்கம் அவர்கள் தலைமையில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பெற்றது.

திருவாளர்கள், சுப. சம்பந்தம், பெரி. திருநாவுக்கரசு, சே. மு. சிவலிங்கம், ஆ. பழ. குமரப்பன் முதலியோர், திருவள்ளுவர், திருக்குறள், திருவள்ளுவர் ஆண்டு முதலியன குறித்து விரிவுரை ஆற்றினார்கள். சில தீர்மானங்களும் நிறைவேற்றப்பட்டன. தீர்மானங்கள் வருமாறு :

"இந்திய அரசாங்கம் தமிழகத்து இந்தியைப் பரப்பும் நோக்கத்தோடு இரயில்வே, அஞ்சல் போன்ற பல்வேறு துறைகளில் அறிவிப்புக்களையும், பெயர்களையும் இந்தியில் எழுதியிருப்பதை நீக்கித் தமிழுக்கே முதலிடம் அளிக்குமாறும், பள்ளிகளில் சிறுவர்களுக்கு இந்தியைக் கட்டாய பாடமாக்குவதை நீக்கித் தமிழ்மொழியை ஊக்குவிக்குமாறும் அரசாங்கத்தினரை இக்கூட்டம் கேட்டுக்கொள்கிறது."

"பாராளுமன்றத்தில் எல்லா உறுப்பினர்கட்கும் புரியும் வகையில் ஆங்கிலத்தில் பேச மறுத்துத் தென்னிந்திய உறுப்பினரை அவமதிக்கு முறையில் அவர்கட்குப் புரியாத மொழியான இந்தியில் பேசுவதும், தென்னாட்டில் இந்தியை எதிர்ப்போர் ஒரு சிறு கூட்டம் எனத் தென்னிந்தியர்களின் தாய்மொழி யுணர்ச்சியினை அவமதிப்பதும் தான்தோன்றித்த போக்கு என இக்கூட்டம் கருதுகிறது."

"தமிழர்களாகிய நாம் தமிழ்மறை யருளிய திருவள்ளுவர் ஆண்டினையே கையாளுதற்குத் தமிழரின் நலங்கருதி யுழைக்கும் எல்லாத் தமிழ்ச்சங்கங்களும் வேண்டும் முயற்சி எடுத்து ஆவன புரியக் கேட்டுக்கொள்ளப்படுகின்றது. திருவள்ளுவர் திருநாளை ஓர் மாபெரும் தமிழ்த்திருநாளாகக் கொண்டாடவேண்டுமென்று தமிழ்ப்பெருமக்களைக் கேட்டுக்கொள்ளப்படுகின்றது."

திருவள்ளுவர் கழகம், தென்காசி
25-வது ஆண்டு நிறைவு வெள்ளிவிழா

இவ்விழா, திருவள்ளுவர் ஆண்டு, ௧௯௮௩, வைகாசித் திங்கள் உரு, உசு, உஎ (7, 8, 9-6-'52) சனி, ஞாயிறு திங்கள் ஆகிய மூன்று நாட்களிலும் மிக்க சிறப்பாக நடைபெற்றுள்ளது. இம் மூன்று நாட்களிலும் முறையே திரு. சர். பி. டி. ராசன் அவர்கள், Bar-at-Law, M. L. A. மதுரை, திரு. அ. கி. பால் நாடார் அவர்கள் B.A., B.L., தூத்துக்குடி, திரு. R. P. சேதுப் பிள்ளை அவர்கள், B.A., B.L., தமிழ்ப் பேராசிரியர், பல்கலைக் கழகம் சென்னை, திரு. சா. கணேசன் அவர்கள், காரைக்குடி, குன்றக்குடி, திருவண்ணாமலை ஆதீனம் ஸ்ரீலஸ்ரீ தெய்வசிகாமணி அருணாசல தேசிக சுவாமிகள் அவர்கள் தலைமை ஏற்றுச் சிறப்புடன் நடத்தியுள்ளார்கள். பல்வேறு துறையில் பல்வேறு

பட்டமும் பயிற்சியும் பண்பும் அமைந்த நாவன்மையும் பாவன்மையும் ஒருங்கமைந்த சான்றோர் பலர் பல அரும்பெரும் விரிவுரைகள் ஆற்றி அணிசெய்துள்ளார்கள். மேலும் ஒவ்வொரு நாளும் திருமுறை இசையும், இசைச் சித்திரமும், நாடகம், நடிப்பு முதலியவைகளும், தனி இசையரங்கும் பிறவும் மாண்புற நிகழ்ந்துள்ளன.

திரு. சி. குப்புசாமி நாயுடு ஞாபகார்த்தப் பிரசவ ஆஸ்பத்திரித் திறப்புவிழா

குறித்த பிள்ளைப்பேற்று நிலையம் பெருவள்ளல் நாயுடு அவர்கள் நினைவு நிலையமாக நிலவுகின்றது. இந்நிலையத்திற்கென நிறுவிய அறங்காவல் திருவினர் அரசியலார் நன்கொடை உதவியும் பெறாது வள்ளலாரின் அறப்பெருஞ் செல்வத்தினின்றே செய்தமைந்த ஆண்மை அருஞ்செயல் மிகவும் போற்றத்தக்கது. இந்நிலையத்திற்கு இதுகாறும் எட்டரைலட்ச ரூபாய் செலவாகியிருப்பதாகத் தெரிகிறது. மேலும் பெரும்பொருள் செலவாகவும்கூடும்.

இந்நிலையம் கோயமுத்தூரில் ஜூன், 30-ம் நாள் திறக்கப்பட்டது. மைசூர் அரசப்பிரமுகர் இதனைத் திறந்துவைத்தார்கள். அவர்களுக்குக் குறித்த அறநிலை ஆட்சிப் பொறுப்பாளர் திரு. சி. கே. தேவராசலு நாயுடு வரவேற்பு படித்தளித்தார்கள். சென்னைப் பல்கலைக் கழகத் துணைவேந்தர் டாக்டர், ஏ. இலட்சுமணசாமி முதலியாரவர்கள் தலைமை பூண்டார்கள். இவர்களே திரு. சி. குப்புசாமி நாயுடு அவர்களின் திருவுருவப் படத்தைத் திறந்துவைத்தார்கள்.

இந்நிலையம் பன்னிரண்டு ஏக்கர் நிலத்தில் கட்டப்பட்டிருக்கிறது. நூறு படுக்கைகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. இவற்றில் அறுபது ஏழைகளுக்கு. இருபது பணம் கொடுக்கும் தகுதி வாய்ந்த செல்வர்களுக்கு. இருபது குழந்தைகளுக்கு. இதன்கண் உண்டி, உடை, உறையுள்கள் நல்கப்படும். மருத்துவர்களுக்கும் செவிலித்தாயர்களுக் (Nurse) கும் இங்கு பயிற்சி அளிக்கப்படுமெனவும் தெரிகிறது.

தூத்துக்குடி, சைவசித்தாந்த சபையினரின் வேண்டுகோள்

சித்தாந்தப் பேராசிரியர் சிவத்திரு. ந. சிவகுருநாதபிள்ளையவர்களைத் தமிழுலகமும் சித்தாந்த உலகமும் நன்குணரும். அப்பெரியார்க்கு வரும் ஆடித்திங்கள் கo-ம் நாள் (25-7-1952) எண்பதாம் அகவை தொடங்குகிறது. அந்நாளில் ஒரு பெரும் பேரவை கூட்டிப் பொற்கிழி நல்கிப் போற்றுதல்புரியத் தீர்மானித்துள்ளார்களாம்.

தூத்துக்குடிச் சைவசித்தாந்த சபையே ஏனைச் சபை கட்குத் தாயனையதாகும். சங்கங்களும், தமிழன்பர்களும், சித்தாந்தச் செல்வர்களும் பொன்னும் வாழ்த்தும் பொருந்திய தொண்டும் புரிந்து போற்ற வேண்டப்படுகின்றார்கள்.

குறிப்பு: புலமை யொடுபண்பு போதிக்கும் செம்மை
நிலவுபெரி யார்க்களித்தல் நேர்.

தமிழ் பரப்புங் கழகம், சிங்கப்பூர்

கடல் கடந்து நெடுஞ் சேய்மைக்கண் செந்தமிழ்ப் பீடுடன் வாழும் அருந்தமிழன்பர்கள் தாய்மொழியாந் தமிழ்மொழியை வேற்று மொழியாளரிடமும் வியத்தகுமுறையில் பரப்ப முன் வந்து முயலும் நயத்தகு செய்தி நம்மனோரால் மிகமிகப் பாராட்டற்குரியது ஒன்றாகும். இக்கழகத்தாரின் மெய்ம்மைக் குறிக்கோள் வருமாறு :

மலாயா பெடரேசனிலும், சிங்கப்பூரிலும் வாழும் தமிழரல்லாதாரிடையே உலகத்திலேயே மிகவும் தொன்மைவாய்ந்த தமிழருக்கேயுரிய பொதுமைநலம் யாண்டும் பொதுளிய தமிழரின் தனித்தியங்கும் இனித்தமுடைய மொழி, கலை, கலையொழுக்கு, பண்பாடு, நனிநாகரிகம் முதலிய சிறந்த குறிக்கோள்களைப் பரப்புதல்.

அதன்பொருட்டுத் தமிழில் உயிர்ப்புடன் நிலவிவரும் நூல்களை ஆங்கிலத்தில் மொழிபெயர்த்துப் பரப்புதல். துண்டு வெளியீடுகள், வெளியீடுகள், வானொலிப் பேச்சுக்கள் முதலிய வற்றாலும் பரப்புதல். இதன் ஆக்கம் குறித்தமைத்த குழுவும் பிறவும் தக்கவாறுழைத்துத் தமிழை யெங்கணும் பரப்பி யாவரும் ஒற்றுமையுற்று வாழத் தமிழ்த்தாய் தண்ணருள் புரிவாளாக. கழகம் சிறந்தோங்குக. கன்னித் தண்தமிழ் வாழ்க. சௌந்தரராசன் தனித்தொண்டு வெல்லுக.

இலங்கை இசுலாமிய அன்பர் வேண்டுகோள்

செந்நாப் புலமைவாய்ந்த செல்வர்பாலிருந்து வெளிவரும் புலவர் வரலாறுகளுடன் ஒத்துத் தூத்துக்குடிச் 'சித்தாந்தப் பேராசிரியர்' திரு. ந. சிவகுருநாதபிள்ளையவர்கள் "**நான் கண்ட புலவர்பெருமக்கள்**" என்று 'செல்வி'யில் வரைந்துள்ள கட்டுரையை மிகவும் பாராட்டிக் கொழும்பு திரு. எப். எம். இபுறாகிம் அவர்கள் எழுதியதோடு மேலும் அவர்களேனும், பிறபுலவர்களேனும் இசுலாமியப் புலவர்கள் வரலாறுகளைச் 'செல்வி' வாயிலாக வெளியிடுமாறு விழைகின்றார்கள்.

குறிப்பு: அவவண்ணம் செய்யவேண்டுமென இதனைக் கண்ணுறும் அன்பர்களை வேண்டுகின்றோம்.

மத்திய அரசியலும் ஹிந்திப் பிடிவாதமும்

மத்திய அரசியலில் குறிப்பாகத் தென்னாட்டவரையும் பொதுவாக வேற்று மொழியாளர்களையும் பொருட்படுத்தா முறையில் இந்தியை வலுகட்டாயமாகத் திணித்துப் பேசுகின்றனர். இது மொழிவளர்ச்சிக்கும் பெருநாட்டின் ஒற்றுமைக்கும் ஊறு விளைப்பதாகுமென்பதை உணரல்வேண்டும். மத்திய சட்டசபைக் கூட்டத்தில் இந்தியில் பேசியதைக் கண்டித்துத் தென்னிந்திய மெம்பர்கள் வெளியேறினர். இவ் வெளியேறிய உறுப்பினர்க்குத் தலைமை பூண்டவர் சென்னையைச் சேர்ந்த டாக்டர் ஏ. கிருட்டிணசாமியும், திருவாங்கூரைச் சார்ந்த மிஸ் அன்னிமாஸ்கரினும் ஆவர். சில காங்கிரசு மெம்பர்களும் வெளியேறினதாகவும் தெரிகிறது.

'இந்தி ஆவேசம் தீமையே விளைவிக்கும்'

சென்னை அசெம்பிளி உறுப்பினர் திரு. பி. டி. ராஜன் அவர்கள் கூறிய சுருக்கம்: இந்தியை முதன்மைப்படுத்த இரயில்வே மந்திரி திரு. லால்பகதூர் சாஸ்திரி அவ்வளவு வெறிக்கொப்பான உணர்ச்சிகளைக் காட்டவேண்டியதில்லை. இதனால் இந்தி இயக்கத்திற்குப் பாதகமே ஏற்படும்.

இந்தி வெறிக்குக் கண்டனம்

திரு. டி. ஆர். வெங்கட்டராம சாஸ்திரியாரவர்களின் அறிக்கையின் சுருக்கம்: நான் ஒரு தென்னிந்தியன். இந்தியை எதிர்ப்பவன் அல்லன். 1937-இல் காங்கிரசு மந்திரி சபை இந்தியைக் கட்டாய பாடமாக ஆக்கியதைத்தான் எதிர்த்தேன்.

இந்திய மத்திய அரசியலில் ஒரு மந்திரி பிறரை மதியாது இந்தியில் பேசியதை எதிர்த்து வெளியேறிய உறுப்பினர்களை நான் ஆதரிக்கிறேன். அவர் உரிமையைவிடக் கடமையைப் பெரிதெனஉணர்ந்திருக்கவேண்டும். தலைவர் உணர்த்தியிருக்க வேண்டும்.

இந்தியைத் திணித்தல் தீங்கு

உதவி ராஷ்டிரபதி திரு. ராதாகிருஷ்ணன் அவர்கள் எல்லாருக்கும் புரியக்கூடிய பாஷையில் விவாதிப்பதுதான் முறைமை. சிலர்க்கோ அல்லது பெரும்பான்மையோர்க்கோ புரியவில்லை என்றால் அந்த விவாதத்தால் பயனில்லை.

இந்தியைப் பரப்பும் சிறந்த நோக்கமுடையவர் அதனை அறியாதவர்கள்மீது திணிக்கக்கூடாது. அங்ஙனந் திணித்தால் அது, அதிருப்தியையும் எரிச்சலையுமே ஏற்படுத்தும். இது தகுதியன்று.

பிறமொழிச் சார்பில் இந்தி வளரவேண்டும்

திரு. புருஷோத்தம தாஸ் டாண்டன் ஆங்கில இடத்தில் இந்தி வரவேண்டிய காலம் வந்துவிட்டது. ஆனல், பிறமொழிகளுக்குக் கேடு விளையும் நிலையில் இந்தியை வளர்த்தல் கூடாது. பிறமொழிகளைத் தூண்களாகக் கொண்டு இந்தி மண்டபம் எழுப்புதல் வேண்டும்.

உலகப் பொதுமறைத் திருக்குறள் இந்திய மத்திய அரசியலில் நிலவல்

பார்லிமெண்டில் திரு. தேஷ்முக் (சமக்கிருத, வல்லுநர் பொருளமைச்சர்.)

> "இலமென் றசைஇ இருப்பாரைக் காணின்
> நிலமென்னும் நல்லாள் நகும்."

என்பதை இடத்துக்கேற்றவாறு தமிழிலேயே கூறி எல்லாரையும் இறும்பூதுறச் செய்தனர்.

இந்தியப் பாராளும் மன்றத்தில் தமிழ் முழக்கம்

கடந்த 4-7-52-ல் புதுடில்லி மக்கள் மன்றத்தில் கேள்வி நேரத்தின்போது, போக்குவரத்து அமைச்சர் திரு. லால்பகதூர் சாத்திரி அவர்கள் பேசிக்கொண்டிருந்தார். அப்போது சென்னையைச் சேர்ந்த திரு. பேபி கந்தசாமி என்னும் உறுப்பினர், அமைச்சரைத் தமிழில் ஒரு கேள்வி கேட்கவே, அவையிலிருந்தோர் அனைவரும் வியப்புற்றனர். பொதுவுடைமைக் கட்சியைச் சேர்ந்த திரு. அனந்தன் நம்பியாரும், காங்கிரசு உறுப்பினர் திரு. சி. ஆர் நரசிம்மனும், திரு. பேபி கந்தசாமி அவர்களின் பேச்சை மொழிபெயர்த்துக்கூற முன்வந்தனர். எனினும், மன்றத்தலைவர் இதனைப் பொருட்படுத்தாது அடுத்த கேள்விக்குப் போய்விட்டார்.

பின்னர் வெளியில் வந்த திரு. பேபி கந்தசாமி அவர்கள், "நான் இந்தி வெறியர்களுக்கு மாற்றுரையாக இனித் தமிழிலேயே பேசப்போகிறேன். இதனை மன்றத் தலைவரிடமும் கூறியுள்ளேன்" என்று கூறினர்.

திருநெல்வேலி, தென்னிந்திய சைவசித்தாந்த நூற்பதிப்புக்
கழகத்திற்காக, சென்னை 2-140, பிராட்வே,
அப்பர் அச்சகத்தில், திரு. வ. சுப்பையா அவர்களால்
அச்சிட்டு வெளியிடப்பெற்றது. ஆசிரியர்: வ. சுப்பையா.

கழகப் புதிய வெளியீடுகள்

கழக ஆங்கிலத் தமிழ்க் கையகராதி:

(Kazhagam English-Tamil Pocket Dictionary)

ஆசிரியர்: கா. அப்பாத்துரை, எம்.ஏ., எல்.டி.

உயர்நிலைப்பள்ளி, கல்லூரி மாணவர்க்குப் பயன்படும் வகையில் எழுதப்பட்டது. ஆங்கிலச் சொற்களுக்கேற்ற தனித்தமிழ்ச் சொற்கள் பல நிறைந்தது. கையடக்கமான உயரிய பதிப்பு. 600 பக்கங்கள் கொண்டது. ரூ. 3 4 0

விவேகசிந்தாமணி — மூலமும் உரையும்:

சிறந்த அறவுரைகள் பொதிந்து சிலேடைநயம், உவமை நயம், காதல் முதலியன நிறைந்த இந்நூல், கழகப்புலவர் செல்லூர்க்கிழார், சே. ரே. இராமசாமி பிள்ளை அவர்களின் தெள்ளிய உரையுடன் முதற் பாகம் வெளிவந்துள்ளது. இதன்கண் நூற்றுமுப்பத்தைந்து பாடல்கள் உள்ளன. இரண்டாம் பாகம் விரைவில் வெளிவரும்.

அழகிய இருவண்ண அட்டையுடன் அமைந்தது ரூ. 0 10 0

உயர்தரக் கட்டுரை இலக்கணம் I: ஞா. தேவநேயன் எம். ஏ.

கட்டுரை வரைவதற்கேற்ற இலக்கணக் குறிப்புக்கள் பலவும் தெளிவாக விளக்கப்பெற்ற புதிய இலக்கண நூலில் இஃது இரண்டாம் பகுதி. மரபியல், கட்டுரையியல் ஆகிய இரு வியல்கள் இதன்கண் விளக்கப்பட்டுள்ளன. மாணவர்க்கேற்ற பயிற்சிகள் பல தரப்பட்டுள்ளன. ரூ. 2 8 0

அம்பிகாபதி கோவை: அம்பிகாபதி

கற்பனைத்திறன், காவியம், கருத்துவளம் செறிந்து கற்பார் இதயத்தைப் பிணிக்கும் சிறந்த கோவை நூல். புலவர் பண்டித மீ. பொன். இராமநாதன் செட்டியாரவர்களின் விளக்கஉரைக் குறிப்புக்களுடன் வெளிவந்துள்ளது.

அழகிய மூவண்ண அட்டையுடன் கூடிய கலிக்காக்கட்டு: ரூ. 5 0 0

வருங்காலத் தலைவர்கட்கு: கா. அப்பாத்துரை, எம்.ஏ., எல்.டி.

இது நாட்டுமக்கள் இளம்பருவமுதல் பயிற்சிபெற வேண்டிய ஒழுகலாறுகளைப் படிப்படியாக விரித்து விளக்கும் அரிய பெரிய நூல்: இதன்கண் 'விளையாட்டுவிழாச் செல்வருக்கு' என்னும் தலைப்புமுதல், 'வாழ்வு தொடங்கும் இளைஞருக்கு' என்னும் தலைப்புவரை கூ பகுதிகளாக விரித்தெழுதி ஆங்காங்கே மேல்நாட்டுப் பேரறிஞர்களின் கருத்துக்களோடு வெளிவந்துள்ளது. நாட்டுமக்களும் இளைஞர்களும் கற்று நலம்பெறத் தகுதிவாய்ந்த நூல். அழகிய அட்டையுடன் அண்மையில் வெளிவந்துள்ளது. ரூ. 1 8 0

பதிவு எண் M. 4899.

சித்தாந்த வகுப்பு

சிவஞானபோதச் சிற்றுரை விளக்கம்

அஞ்சல் வழி

பேரன்புடையீர் !

திருநெல்வேலியில் தருமபுர மடத்தில் தென்னிந்திய சித்தாந்தச் சங்கச் சார்பில் 27-4-1952 முதல் 20-5-52 முடிய சித்தாந்த வகுப்பு செவ்வனே நடந்தது. அதற்கு ஆசிரியப் பெருந்தகையாகச் சாத்தூர் வழக்குரைஞர், சித்தாந்த சிரோன்மணி, திரு. தூ. சு. கந்தசாமி முதலியார், எம். ஏ. அவர்களமைந்தார்கள். "சிவஞான போதச் சிற்றுரை"யைப் பல மாணவர் பயின்று தேர்ந்துள்ளார்கள்.

தங்கள் தங்கள் உறைவிடங்களிலிருந்தே எளியமுறையில் எல்லாரும் கற்க வாய்ப்பு ஏற்படுவது நலமென்று எண்ணி அஞ்சல் வழியாகப் பாடம் படிப்பிக்கத் துணிந்தோம்.

1128 ஆவணி முதல் ஆடி முடிய ஓர் யாண்டுக்குள் திங்களுக்கு இரண்டு பகுதிகளாகப் பதினைந்தாம் நாளும் முப்பதாம் நாளுமாய் இருபத்துநான்கு பகுதிக்குள் பாடம் முற்றுப்பெறும். பாடம் சிறந்தமுறையில் எளிய பல எடுத்துக்காட்டுக்களுடன் விளக்கமுற அமைந்திருக்கும். அஞ்சல்வழி வகுப்பில் சேரும் விழைவுள்ள மெய்யன்பர்கள் ஆண்டுக் கையொப்பமாக அஞ்சற்கூலியுள்பட ரூபா 4-0-0 நான்கு வரும் ஆடித்திங்கள் பதினைந்தாம் நாளுக்குள் முன்பணமாக அனுப்பி வகுப்பில் சேர்ந்துகொள்ளுதல்வேண்டும். அவர்களுக்கு அவ்வப்போது பகுதி பகுதியாக அச்சிட்டவைகள் அனுப்பப்பெறும். ஆறு திங்களுக்கு ஒருமுறையாக இரண்டு தேர்வுகள் நடத்தப்பெறும். தேர்ந்தவர்களுக்குச் சான்றிதழும் பரிசும் நல்கப்பெறும்.

விளக்கம் எழுதுபவர் கழகப்புலவர் சித்தாந்த பண்டிதர் திரு. ப. இராமநாதபிள்ளை அவர்கள்.

மேலாளர், சைவசித்தாந்த நூற்பதிப்புக் கழகம், லிமிடெட்,
1/140, பிராட்வே, சென்னை - 1.

அப்பர் அச்சகம், சென்னை - 1.